முண்டு பாங்கான கோட்டைக்கு இடபாகத்தில், வதி பான மணலென்ற வாறுமுண்டு மகத்தான ஆற்றருகே சுனையுமுண்டு, துதியான கிங்கிலியர் காவலுண்டு துறை முகத்தில் கறுப்பண்ணன் நிற்பான்பாரே. 267

நிற்பானே பாஞ்சாலன் எக்கியசாலை நெடிதான பொன்விலையுந் தலமொன்றுண்டு, கற்பான கன்னிகைக ளங்கிருப்பார் கண்டாலே சாபத்தால் சமைப்பார்கண்டீர், பொற்பான குடமெடுத்துச் சலமேதூக்கி போற்றியே எக்ளயத்திற் கர்ச்சனையே செய்வார், துற்பான யாகசா லயத்தைக்கண்டேன் துடியான் குளிகையிட்டு நடந் தேன்பாரே. 268

நடந்தேனே சீனபதி நாடிவந்தேன் நானங்கே சில கால மிருந்து பார்த்தேன், தொடர்ந்தேனே தட்சணமாம் பகுதிக்குவந்தேன் தொடரான வஞ்சனமாங் கிரியில் வாழும், அடர்ந்தேனே யவரிடமாங் குகையிற் சென்று அடங்காத சாத்திரத்தி னுளவுபார்த்துக், கடந்தேனே கரமலை மேலைசென்றேன் கடாட்சிக்க ரிஷிபதத்தை துறை பார்த்தேனே. 269

துரைகண்டேன காலங்கி பாதங்கண்டேன் துய்ய மலர் தானெடுத்துச் சரணஞ்செய்தேன், கரைகடந்தேன் கடந்தமுனி ரிஷிகள் தம்மை கார்க்கவென்று அவர்களிட பாதஞ்சென்றேன், முறைகொண்டேன் சித்தர்களை யான் வணங்கி மொழிந்திட்டேன் லோகத்தின் மகிமைதன்னை, தரைகண்டே னடிமுடியு மனைத்துங் கண்டேன் சதா நிஷ்டை யத்தனையும் வெளியிட்டேனே. 270

வெளியிட்ட யெந்தன்மேல் சந்தோஷித்து வெளியாக சாத்திரத்தின் மரைப்புதன்னை, பளியிட்ட சாபத்தை நிவத்திசெய்து பாருலகி லெல்லோரும் பிழைக்கவென்று, குளியிட்ட கவனமுதல் கெவுனசித்தி குறிப்பான வடை யாளமனைத்துங்காட்டி, வளியிட்டாரெந்தனுக்கு வாக்கு சொல்லி வரங்கொடுத்தார் ரிஷிமுனிவர் சித்தர்தாமே.

போகர் இறந்தவரைக் காண்பிக்கிற ஜாலமாளிகை

சித்தருடன் வரம்பெற்றுத் திரும்பியானும் சென் றேனே சீனபதிதேசந்தன்னில், நித்தமுடன் முனிரிஷிகள் சித்தர்தாமும் நேர்ந்துரைத்த முறைப்படியே யானுங் கொண்டு, சத்தமுடன் செத்ததொரு மனிதர்தம்மை த்தரணியில் காணுதற்கு ஜாலஞ்சொல்வேன், பக்தியு டன் மாளிகையா மச்சிவீடு பாங்காகத் தான் சமைப்பீர் மைந்தர்கேளீர். 272

கேளவே பத்தடியாய் நான்குபக்கம் கெடியான சந் தில்லா மச்சிவீடு நீளவே வொருபக்கம் சந்தமைத்து நிலை யான வாள்போக யிடமுண்டாக்கி, தாளவே கண்ணாடிக் கீழ்புதைத்து தாக்காகச் சுற்றிலும் படமடைத்து, ஆளவே ஒவ்வொரு படத்தில்தானும் அய்யனே ஆண் பெண்ணாய் ரூபஞ்செய்யே. 273

செய்யவே கண்ணாடி யறுபத்துநான்கு திறமுடனே வைங்கோல மையினாலே, பையதே வெவ்வெரு சட்டந் தன்னில் பாங்காகப் பலவிதரூபமாக, தொய்யவே சகல விதவர்னத்தாலே தோற்றவே நேத்திரத்திற் கழகதாக, மையவே மறைப்பினிட கருவினாலே மாட்டா நெற்றி தனில் பொட்டும் வையே. 274

வைக்கவே மாளிகையில் மேற்புரத்தில் வகையுடனே வாகாசுங் காண்பதற்கு, கைக்கனத்தக் குழாயொன்று துத்தநாகம் கடுந்தூரம் பார்வையது தெரியவேதான், மெய்க்கவே குழாயினிட சந்தினாலே மேல்நோக்கி வாகா சந்தன்னைப்பாரு, பொய்க்கவே கண்ணிமைகள் சிமிட்டா மற்றான் பொங்கமுடன் தானின்று சிரசைப்பாரே. 275

பார்க்கையிலே ரூபமது யெதிரேநிற்கும் பாங்குடனே மறுபடியு மாயாரூபம், பார்க்கையிலே மறுபடியுங் கண் ணாடிபாரு படிகமென்ற கண்ணாடி ரூபங்காட்டும், பார்க் கையிலே யாரைநீ நினைந்திட்டாலும் பட்சமுட னெதிர் நின்று தோற்றங்காணும், பார்க்கையிலே நிஜரூப மிறந் தோர்காண்பீர் பாரினிலே சாலவித்தைப் பகரலாமே. 276

பகரலாம் தோற்றமதைக் காணும்போது பகற்கால மேகமது இருக்கப்போகா, நகரெலாஞ் சூரியனி னொளியே வேண்டும் நாட்டமுடன் திரைக்குள்ளே நிற்கும்போது, சகரெலாம் காண்பதற்கு இடமும்வேண்டு சட்டமுடன் கடிகைதனில் பத்துக்குள்ளே, புகரலாம் மானிகையில் சாலவித்தை புகழ்ச்சியுட னெப்போதுங் காட்டுவீரே.

காட்டவே மாளிகையி லுட்புகுந்து கனமான ரூப மதைக் காணும்போது, நாட்டமுடன் மனோலயமு மாறி யேதான் நடுக்கமுடன் நேத்திரத்தில் ரூபங்காட்டும், வாட் டமுடன் செகசால வித்தைதன்னை வாகுடனே மானிடர்க ளறிய வென்று, தேட்டமுடன் போகரிஷி யானுங்கண்டு தெளிவாகப் பாடிவைத்தேன் திறமிதாமே. 278

திறமான வித்தைதனை சீனந்தன்னில் தெளிவாகச் செய்துமல்லோ கீர்த்திபெற்றேன், திறமான போகரிஷி யென்று சொல்லி திக்கிலுள்ள செனமெல்லாங் கண்டு வந்து, திறமான வித்தையிது வதீதவித்தை தேசத்தில்

கிட்டாது சித்தர்க்கில்லை, திறமான லோகமதை மயக்கும்
வித்தை தெரிவித்தார் போகரிஷி யென்றிட்டாரே. 279

என்றிட்ட சித்தரெல்லா மொன்ருய்க்கூடி ஏகாந்தம்
பேசியல்லோ எனைக்கோபித்தார், கன்றிட்ட பாலது
போல் யானும் பொங்கி கடிந்துரைத்த மொழிதனையே
கருத்திலுன்னி வென்றிட்ட ரிஷிமுனிவர் சாலம்சொன்
ஞர் வேதாந்த தாயெனக்குச் சாபந்தீர்த்தாள், அன்றிட்ட
சாபமதை கடந்துயானும் அப்பனே யனேகவித்தை செய்
தேன்பாரே. 280

போகர் மலையின்பேரிலிருந்து குதித்தது

பார்க்கவே வாகாச பர்வந்தன்னில் பரிவுடனே குதிப்
பதற்கு கூண்டுசொல்வேன், கார்க்கவே வட்டமாங் குடை
தானென்று பாங்கான குடைங்கிள மகலங்கேளீர், ஏர்க்
கவே யாரடியா வட்டவீடு எழிலானபட்டுவடந் தன்னுற்
செய்து, தீர்க்கவே பிரம்பதுவு முப்பத்திரண்டு திறமான
சக்கரமு மொன்றேமாட்டே. 281

மாட்டவோ சக்கரத்தி லிரும்புக்கம்பி மார்க்கமாய்
தான் முடுக்கி வாணிமாட்டி, நீட்டமுடன் கம்பிக்குத்
துணிதான் போர்த்து நெடிதான சூத்திரமாங் கயர்தான்
கோர்த்து, வாட்டமுடன் தான்விரித்து குடைகையேந்தி
வாகாகத் தான்குதிக்கில் வாயுபூந்து, தேட்டமுடன் காற்
றதுவுங் கூண்டேதூக்கும் தீவிரமாய மனிதனுந்தான்
கீழ்நோக்கலாமே. 282

நோக்கலாம் குடைதனையே கையிலேந்தி நொடிக்
குள்ளே மலையைவிட்டுக் குதிக்கும்போது, தூக்குமேகொ
டைதானு மனிதனைத்தான் துப்புரவாய் மனிதனங்கே
துணிவுகொண்டு தேக்குடனே பூமிதனிலிறங்கும்போது
தேசமெல்லாங் கண்ணுக்கு எணுவுபோலும், நோக்கு
டனே தெரியுமென்று போகர்தானும் நேராகப் பாடிவைத்
தேன் நேர்மைபாரே. 283

பாரேதா னின்னமொரு சூட்சஞ்சொல்வேன் பாருலகி
லிந்தவித்தை பழக்கஞ்செய்ய, சீரேதா ஞற்றருகே தன்
னிற்சென்று சிறப்பான ஜலமதுவும் நிற்கும்போது, நீரே
தான் பாளமதில் நின்று கொண்டு நேர்த்தியாய்க் குடை
தனையே கையிலேந்தி, தீரேதான் சலமதனில் குதிப்பாயா
ஞல் திறமான தேகமது பழுதுருதே. 284

பாளம் எண்பது வாராவதி

பழுதுமே வாராது தேகந்தானும் பலகாலு மிப்படியே
பழக்கஞ் செய்தால், கழுதுவள தானிருக்கம் பனையின்
மேல் கருவாகத் தானேறிகுடை கையேந்தி, தொழுமே
பராபரியை மனதிலெண்ணி தொய்யாமலே பூமியிலே

குதிப்பீராஞல், முழுதுமே லேசுடனே பழம்கந்தன்ஞல்
முனையான கோபுரத்தி லேறலாமே. 285

ஏறலாங் தேவதா கோபுரத்தில் எழிலான குடை
தனையே கையிலேந்தி, தேறலாஞ் சிகரபுரை மீதிருந்து
தேற்றமுடன் குடைதனையே விரித்துயேந்தி, மாறலா
மேலிருந்து கீழ்குதிக்கில் மதிப்புடனே தீரஞயிருந்து
கொண்டு, கூறலா மிக பழக்க மதிகமாகி குன்றின்மே
லேறுதற்கு குணமுண்டாமே. 286

குணமுண்டா மடமணமுண்டாங் குவலயத்தில்
கோடிபே ருனைவந்து மனங்களிப்பார், பணமென்ன
கோடி தனம் படைத்தாலென்ன பாருலகி லிவ்வித்தைப்
பகரப்போமோ சினமதிலே யானுமிந்த வித்தை தன்னைச்
சீனபதி சென்றுசெய்து கீர்த்திபெற்றேன், வனமுடனே
மானிடர்கள் பிழைக்கவென்று வாகுடனே பாடிவைத்
தேன் வளமைபாரே. 287

பாடினதோர் வண்மையினுல் சித்தமெல்லாம் பாரு
லகி லென்மீது கோபங்கொண்டார், தேடினதோ நாதாக்
களதீதவித்தை தெருவினிலே வீணுகப் போச்சுதொன்று,
கூடியே எல்லோரு மொன்ருய்க் கூடிகூறிஞர் சாபமது
என்னசொல்வேன். நாடியே காலாங்கி நாதர்பாதம் நான்
வணங்கி சாபமதைத் தவிர்த்திட்டேனே. 288

தவிர்த்திட்டேன் மறுபடியுஞ் சித்தர்கூடி தயவுடனே
எனையழைத்து தர்க்கம்பேசி, மவிர்ந்திட்ட சாலமது மிஞ்
சிப்போச்சு மகத்தான வித்தையது பாழாய்ப் போச்சு,
உயர்த்திட்ட வித்தையது சொல்லப்போகா உத்தமனே
செத்தவரை பிழைக்கும் வித்தை, நிவர்த்திட்டு மற்றதெல்
லாஞ் செய்யவென்று நீணிலத்தில் நாதாக்கள் தடுத்திட்
டாரே. 289

தடுத்திட்ட மொழிப்படியே யான்வணங்கி தட்டாம
லவர்பாதம் பணிந்துமேதான், அடுத்திட்ட நிர்வாணி
பாதஞ்சென்று அப்பனே நெடுந்தவசு தானிருந்து,
கொடுத்திட்ட வித்தையெல்லாங் குவலயத்தில்
கொட்டினேன் மானிடர்கள் பிழைக்கவென்று, எடுத்திட்
டுக் குளிகைதனை கொண்டுயானும் ஏகினேன் சீனபதி
யமர்ந்திட்டேனே. 290

பதியான மேருகிரி தன்னிற்சென்றேன் படியான
சிரம்வரை யானுங்கண்டேன், நதியான தனையொன்று
வங்கேகண்டேன் நாதாக்களிருப்பிடமுந் துறையுங்கண்
டேன், பொதியான புத்தொன்று வங்கேயுண்டு புகழான
சித்தொருவ ரதிலேகண்டேன், துதியான நமஸ்காரஞ்
செய்துகொண்டு தொழுதுமே யவர்பாதம் பணிந்திட்
டேனே. 291

பணிந்திட்டேன் சித்தரையான் வணங்கி மெத்தப் பரிவாக நின்றுகொண்டு பான்மைகேட்டேன் துணிந் திட்டு யாவரிடமும் பத்திவைத்து தொண்டனுய்க் கீழி ருந்து துதித்துநின்றேன், கனிந்திட்டு என்பேரில் கிருபை கூர்ந்து கடாட்சிக்க யெந்தனைநீ யெவர்தானென்றூர், வணிந்திட்டு என்பேரு போகரென்றேன் வந்தவரலா ரென்ன சொல்லென்றூரே. 292

சொல்லவே சீனபதி நடந்துயானும் துப்புரவாய் குளிகையது பூண்டுகொண்டு, மெல்லவேமேருகிரி பார்க்க வென்று மேன்மையாய்த் தங்களிடஞ் சேர்வைகண்டேன், புல்லவே யவரெனக்கு வாக்களித்தார் பூதலத்தில் மணி தரப்பா வந்தாயென்றூர், அல்லவே நானுமுன்னைச் சபிப் பேனென்றூர் அப்பனே மனம்பொருத்தே னென்றிட்டாரே.

என்றுமே பாலனுமே யேற்கிநிற்க என்பேரில் மறு படியுங் கிருபைவைத்து, குன்றுமேல் வந்ததுனக் கதிக குற்றம் கொடிதான தண்டனைகள் செய்யவேண்டும், ஒன்றுமே யாமுனக்குச் செய்யாமற்றூன் உத்தமனே உப தேசஞ் செய்வேனென்றூர், கன்றுடனே தாய்ச்சேர்ந்தக் கதையைப் போலக் காத்திருந்தேன் வெகுநாளா யானுந் தானே. 294

காந்திருந்த யெந்தனுக்கு கடாட்சம்தைத்து கைலாச மேருகிரி வந்தபாலா, பார்த்திருந்து துவாபரமாய் புகத் தில் யானும் பர்வதமா மேருகிரி தன்னில்வந்தேன், சேர்த் திருந்த வதிசயங்கள் மெத்தவுண்டு செப்பினு ரெந்த னுக்கு வெளிதாகவே, போர்த்திருந்த புலித்தோலி னுச னத்தைப் பொங்கமுட னெனக்களித்தார் புதுமைபாரே.

போகரிடம் பதுமை பேசியது

புதுமையுடன் கனியொன்று எனக்களித்தார் பொங்க முடன் பசியாறி வீற்றிருந்தேன், பதுமைதனை யவரிடத் தில் கண்டேன்யானும் பட்சமுட னதுவருகில் நின்றிருந் தேன், பதுமையுட னென்னிடத்தில் மிகவும்பேசி கரு வானமறப்பையெல்லா ம்பிரித்துக்காட்டி, முதுமையுட னுபதேசஞ் செய்துயென்னை மோட்சவழிக் கேகும்வழி சொல்லாச்சே. 296

ஆச்சப்பா பிரதமையின் மகிமைதானும் அதற்கப்பால் மேருவின் வடபாகத்தில், பேச்சப்பா யில்லையது பதுமை யப்பா பேரான பதுமையொன்று மங்கேகண்டேன், மூச் சப்பா சுவாசனையால் உயிரென்றெண்ணி முன்னிருந்த பதுமைபோ லிருக்குதென்று, வீச்சப்பா வதனிடத்தில் நின்றேன் யானும் வேடிக்கை விநோதமெல்லாஞ் சொல்ல லாச்சே. 297

இரண்டாவது பதுமைக்கு போகர் வணக்கஞ்சொல்வது

சொல்லுவது வப்பதுமை புதுமைமார்க்கம் சுந்தரனே யாரென்று யெனைதான்கேட்க, மெல்லவே யான்பயந்து நடுநடுங்கி மெத்த வுபசாரமுடன் வணங்கியானும், வெல் லவே, காலாங்கி நாதர்பாதம் விருப்பமுடன் தான் தொழுது எடுத்துரைத்தேன், புல்லவே யென்பேரு போக நாதன் புகழ்ச்சியுடன் குளிகையிட்டு வந்திட்டேனே. 298

வந்திட்டேன் சீனபதி யான் கடந்து வாகுடனே மேரு கிரிகாண வந்தேன், குந்திட்ட சித்தருட புத்துகண்டேன் கோடித்து அவர்பாதம் பணிந்துநின்றேன், முந்திட்ட பதுமையொன்று முன்னே கண்டேன் மொழிந்திட்ட வனேகவித வதிசயங்கள், தந்திட்ட தெந்தனுக்கு மனேக வுண்மை தயவுடனே கொடுத்ததென்று மொழிந்திட் டேனே. 299

மொழிந்திட்ட வார்த்தைதனைக் கேட்டபோது முனை யான பதுமையது வென்னைப்பார்த்து, சுழிந்திட்ட வனேகவித வித்தையெல்லாஞ் சூட்சமுட னெந்தனுக்கு சொல்லலாச்சு, பருந்திட்ட நானுமல்லோ வெகுவாய்பேசி பாங்கான வுயிர்கொடுக்கு மூலிகேட்டேன், வழிந்திட்டு யெந்தனுக்கு சொன்னதென்றூல் வையமெல்லாஞ் சித்தா கப் போகுந்தானே. 300

போகுமென்று சொல்லியல்லோ வந்தவித்தை பூதலத் திற் செய்யமுடி போகாதென்று, சாகும்வித்தை யெழுப்பு வது சரியுமல்ல தற்கால முந்தனுக்கு மனேகவித்தை, பாகுடனே செகசால மிந்திரசாலம் பாங்கான கோகண மயேந்திரசாலம், ஆகுடனே கூடுவிட்டுப் பாயும்வித்தை அப்பனே யெந்தனுக்கு கொடுக்கலாச்சே. 301

போகர்-சுப்பிரமணியர் கோயில் கண்டது

கொடுக்கவே யெந்தனுக்கும் ரிஷியும் வந்து குறிப்பு டனே யெந்தனது ராசிபார்த்து, விடுக்கவே வேண்டு மென்று மனதிலெண்ணி வேதாந்த நுட்பமெல்லா மெனக்கோதித்து, தொடுக்கவே வடிவேலர் கோயில் முன்னே துற்புறவாய்ப் போவதற்கு துறையுஞ்சொன் சொன்ஞர், நடுக்கவே சிகரம்வரை மேலேயேறி நளின முடன் வேலவரைக் கண்டிட்டேனே. 302

கண்டிட்டேன் வேலவரை யடிபணிந்தேன் காலாங்கி நாதரைத் தொழுதுபோற்றி, மண்டிட்டுக் கால்பணிந்து அடிவணங்கி மகாதேவா சரணமென்று தொழுதேன் யானும், தெண்டிட்ட அடியேனை வேலர் பார்த்து தேவரி டம் வந்ததென்ன பாலாவென்றூர், விண்டிட்டு யானுமப்

போவரலாறு சொன்னேன் விரும்பியே யெந்தனையு மாட்
கொண்டாரே. 303

சொன்னவுட னடியேனுந் தான்பணிந்து குறிப்பு
டனே காலாங்கி தனைநினைந்து, அண்டசரா சரங்களெல்
லாங் காண்வென்று அய்யனே குளிகைதனை பூண்டு
கொண்டு, கண்டறிய வேண்டுமென்று மேருதன்னில்
கருத்துடனே சிகரவரை யேறிவந்தேன், திண்டமுடன்
புத்தொன்று யானுங்கண்டேன் திறமான சித்தொருவ
ரிருந்திட்டாரே. 304

இருந்திட்ட சித்தரென்னை கண்டுவந்து இனிதாக
வாய்மொழிகள் தாமுறைத்தார், வருந்திட்டு யானுமெனக்
கெதியேதென்றேன் வாகான சித்தரவர் பேசவில்லை, சருந்
திட்ட பதுமையது தன்னைப்பார்த்து சட்டமுடன் கண்
சாடைக் காட்டினார் பார், மருந்திட்ட பதுமையது யென்னை
யாரென்ன மார்க்கமுட னான் பயந்து போகரென்றேன்.

என்றேனே பதுமைக்கு விடையுஞ்சொன்னேன் என்
மீது பதுமையது கிருபைவைத்து, குன்றான பொரு
ளெல்லா மெனக்கோதித்து குவலயத்தில் போகவென்று
வாக்களிக்க, பன்றான சிகரவரைக் காணவென்று பாங்
குடனே மறுபடியு மேலேவந்தேன், ஒன்றான பதுமையது
பின்னுங்கண்டேன் ஓகோகோ நீயாரென் றோதலாச்சே.

போகரிஷி ஆசீர்மம் சொன்னது

ஓதவேயான் வணங்கி ஒடுங்கிநின்று ஒப்பமுடன்
பணிந்து தொழுதுநின்றேன், நீதமுட னெந்தனுக் வுபதே
சங்கள் நிட்களமாம் பூரணத்தை யோதிற்றங்கே, போக
ரிஷி யங்கிருந்து வாழ்த்து சொன்னார் பூதலத்தில் போய்
பிழைக்க வயணஞ்சொன்னார், தோதமுட னனைத்துங்
கேட்டுமேதான் தோற்றமுடன் தங்களிடங் கண்டேன்
தானே. 307

கண்டுமே தானுரைத்தே னதீத மார்க்கம் கைலாச
நாதரங்கே கிருபைகூர்ந்து, அன்டமுடன் மேருகிரி தன்
னில்வாழும் அழகான மயில் மீதிலிருந்துகொண்டு,
தொண்டனெனக் கதிகமுட னுபதேசங்கள் சுருக்கமுடன்
றானுரைத்தார் ஞானம்நூறு, விண்டுமே மேல்வரையிற்
சிகரம் போனேன் மிக்கான கணபதியைக் கண்டிட்
டேனே. 308

இட்டேனே கணபதியை யானுங்கண்டேன் இயலான
மேருகிரி தன்னில்வாழும், அட்சான பெருச்சாளி வாகனத்
திலன்புடனே வினாயகரும் வீற்றிருந்தார், கிட்டான தேவ
ருட னனேகம்பேர்கள், கிருபையுட னங்கிருந்தார்

சேர்வைகண்டேன், சட்டான தோத்திரமும் அறுநூறு
சொன்னார் சாங்கமுட னுபதேசம் பெற்றேன்பாரே. 309

பாரேதான் மேருகிரி பக்கம்போனேன் பாங்கான
கனையுண்டு குகைதானுண்டு, சீரேதான் சித்தரவர் நூறு
பேர்கள் சிறப்பாக வங்கிருப்பார் தவயோகத்தில்,
நேரேதா னவர்கள் முகந் தன்னில் நின்றேன் நிஷ்கரமா
யெந்தனையும் நிமிர்ந்துபார்த்தார், சேரேதா னிவ்விடத்
தில் வந்ததென்ன சிறியதோர் பாலகனே சொல் 310
லென்றாரே.

சொல்லென்றார் சித்தரெல்லா மொன்றாக்கூடி சூழ்ந்து
கொண்டா ரெந்தனையுங் கிட்டிவந்து, கல்லென்ற கல்
லோடே யான்பயந்து கர்த்தாவாங் காலாங்கி நாதர்
தம்மை, புல்லனான் சிறியவனும் யாநினைந்து புத்தியுடன்
தைரியங்கள் மிகவுண்டாகி, வெல்லவே சித்தர்களை அடி
பணிந்து விருப்பமுட னென்பேரு போகரென்றேன். 311

போகர்நான் குளிகையிட்டு சீனம்விட்டுப் பொங்க
முடன் மேருகிரி தன்னைக்காண, வேகமுட னாலுவரை
யேறிவந்தேன் வேதாந்த மதனையே காணவில்லை. முடன்
வடிவேலர் தன்னைக்கண்டேன் யுற்றதொரு பதுமை
முகம் சேர்வைகண்டேன், சாகமுடன் சித்தருட தெத்து
கண்டேன் சண்முகத்தின் சூலமுதல் மயில்கண்டேனே.

மயில்கண்டேன் சுப்பிரமணியர் தன்னைக்கண்டேன்
வாகான பதுமையொன்று வங்கேகண்டேன், ஒயி
லுடனே பதுமையுப தேசங்கேட்டேன் ஓங்கார சத்தமது
காதிற்கேட்டேன் வெயிலுடனே பனிமுகமுந் திசைகள்
மாறி வெட்டவெளி சின்மயத்தின் சோதிகண்டேன், குயி
லுடைய சத்தமது பதுமைகூற கொற்றவரே தமதிடத்
தில் வந்திட்டேனே. 313

வந்திட்டே னென்றலுமே வார்த்தைசொன்னேன்
வாராக எந்தனுக்கு கிருபைகூர்ந்தார், முந்திட்ட சாப
மதை நிவர்த்திசெய்து மொழிந்திட்டார் மாநிலத்தில்
போகவென்றார், பிந்திட்டு யடியேனுஞ் சித்தார்முன்னே
பேசினேன் வெகுவாக வாதுசெய்தேனே. தந்திட்டாரெந்
தனுக்கு சாத்திரங்கள் சதகோடி வித்தைகளை யறிந்
திட்டேனே. 314

அறிந்தேனே மேருவுக்கு தென்பாகத்தில் அஷ்டவித
சித்தர்கள்தா னங்கிருந்தார், பறிந்திட்டு யவர்களைநான்
தெரிசித்தேதான் பாங்குடனே யவரிடமும் வணங்கி
நின்றேன், சறிந்திட்ட சாத்திரங்கள் மிகவுஞ்சொன்னார்
சரிகைகிரி யோகமுதல் யாவுஞ்சொன்னார், குறிந்திட்ட
வஷ்டங்க யோகஞ்சொல்லி கொற்றவர் நீ யாரென்
றெனைக் கேட்டாரே. 315

கேட்டவுடன் காலாங்கி நாதர் தம்மைக் கிருபை
யுடன் முன்பணிந்து நினைத்துயானும், தேட்டமுடன்
சீனபதி தனிலிருந்து திறமான குளிகையது பூண்டு
கொண்டு, வாட்டமுடன் மேருகிரி காணவந்தேன் வாகு
டனே பாதரித்து கார்க்கவென்றேன், கூட்டமுடன் சித்
தர்களு மொன்றுய்க்கூடி கூறினுர் ஞானுபதேசந்
தானே. 316

சித்தர்கள் உளவு சொன்னது

தேசமாம் சாத்திரத்தின் தொகுப்பைக் கேட்டேன்
தெளிவாகத் முரைத்தார் வுளவையெல்லாம், மோசமில்லை,
யென்றுசொல்லி யென்னை நம்பி மொழிந்திட்டார் சித்தர்
களின் மறப்பையெல்லாம், பாசமுன் கிருட்டிருந்து
யழைப்த்துப்போய் பாங்கான கிடாரமுதல் செயசூதத்தை,
நேசமுடன் தானிருக்குஞ் செந்தூரத்தை நிட்சயமா யெந்
தனுக்கு காண்பித்தாரே. 317

காண்பித்தார் சித்தர்தம்மை விட்டுநீங்கி கடந்துமே
சிகரம்வரை யேறலானேன், காண்பித்தார் மேருவுக்கு
கீழ்பாகத்தில் கருவான மூலியுண்டு வேதையுண்டு, காண்
பித்தார் குகைமுதலா மடங்கள் தம்மை கடியான சித்தர்
முத லிருக்குமார்க்கம், காண்பித்தார் சதகோடி ராமலிங்
கம் கருத்துடனே தானிருக்குந் தலங்கண்டேனே. 318

தலங்கண்டேன் சதகோடி சமாதிகண்டேன், தாக்
கான சித்தர்களின் பெயருங்கண்டேன், வலங்கண்டு
இடம்புரியாய் சுத்திவந்தேன் வாகுடனே வர்ச்சனைகள்
மிகவுஞ்செய்தேன், பலங்கொண்ட சித்தருட சமாதிநின்
றேன் படிகமென்ற லிங்கமதை பணிந்துநின்றேன்,
கலங்கொண்டு காலாங்கி நாதர்தம்மைக் கருத்திலே
தானினைந்து கலங்கிட்டேனே. 319

கலங்கிட்ட யெந்தனையுங் கார்க்கவென்று கடிதான
சமாதிதனிலிருந்தசித்தர், துலங்கிட்ட சமாதி தனி
லிருந்துகொண்டு துப்புரவா யெந்தனையும் தட்டிக்
கேட்க, விலங்கிட்டு யானுமது தூரநின்று விருப்பமுடன்
முள் பணிந்து போகரென்ரேன், மலங்கிட்டு சமாதிதனி
லிருந்தசித்தர் மார்க்கமுட னுபதேசஞ் செய்திட்டாரே.

மேருவுக்கு மேற்கு சித்தர் மகுத்துவம்

செய்திட்ட பிற்பாடு சிறியேன்தானும் சிறப்புடனே
மேருவுக்கு குணபாகத்தில், செய்திட்ட ரிஷிகோடிசித்த
ரப்பா மெய்மறந் துதவ நிலையில் நிற்கக்கண்டேன்,
பொய்த்திட்ட மில்லாத சித்தர் தம்மை பூதலத்தில் காண
பதுவு மறிதேயாகும், வைதிட்டால் குற்றமில்லை யென்று
சொல்லி வாகுடனே யவரருகில் நின்றேன்பாரே. 321

பார்க்கையிலே சித்தர்முனி ரிஷிகள் தாமும் பாகு
டனே யெந்தனையா ரென்றுகேட்டார், மேற்கையிலே
யிருந்ததொரு சித்தர்தம்மை மேன்மையுடன் முள்பணிந்து
வணக்கஞ்சொன்னேன், கார்க்கவே வேண்டுமென்று
காலாங்கிதம்மைக் கருத்திலே தானினைந்து குளிகை
பூண்டு, தீர்க்கமுடனென்பேரு போகரென்றேன் திறமை
யுடன் சித்தர்களு மருள்செய்தாரே. 322

அருள்செய்தா ரெந்தனையு மழைத்துச்சென்று அனேக
வித தருமான உளவுஞ்சொல்லி, பொருளிந்த குகை
முதலு மர்மங்காட்டிப் போக்கான வழிதுறையு மிக
வுரைத்து, இருள்சேர்ந்த பாறையது தன்னிற் சென்று
எழிலான பச்சமலைத் தன்னைக்காட்டி, முருள்சேர்ந்த
பொன்வனையுந் தலமுங்காட்டி மூதண்ட மானரசக்கிணற்
சொன்னுரே. 323

சொன்னுரே காஞ்சான மாமலையுங்காட்டி துறை
கோடி ரவிவிளையு மிடமுங்காட்டி, மின்னேதான் கெம்பி
னிட வுளவுஞ்சொன்னுர் மேலான சிகரவரை முனையுங்
காட்டி, அன்னேதா னருமையுடன் சுனையுங்காட்டி அப்
பனே கருமூலி விளைவுங்காட்டி, பொன்னேதான் விளை
கின்ற வாறுங்காட்டிப் பூதலத்தில் போகவென்ன விடை
தந்தாரே. 324

கறுப்பு செந்தாமரை

விடைதந்தார் மேருகிரி மேலேசென்றேன் மிக்கான
சித்திரகூடந் தன்னைக்கண்டேன், தடைமுகமாந் தடாக
மதில் புஷ்பங்கண்டேன் தாக்கான கருஞ்செந்தா மரை
யுங்கண்டேன், படைமுகமாம் ராட்சதாள் கூட்டமுண்டு
படியோரம் யாராலும் கிட்டவொண்ணு, சடைமரமாஞ்
சவ்வாது மரமுங்கண்டேன் சந்தனமாம் விருட்சமுடன்
மரங்கண்டேனே, 325

மரங்கண்டேன் நிறங்குலந்தேன் மேருதன்னில்
மகுத்துவங்கள் சொல்லிமுடி யாதுகண்டீர், வரங்
கொண்ட சித்தர்களு மங்கேயுண்டு வடிவான செம்புரவி
பொன்மானுண்டு, நிறங்கொண்ட கரும்பசுவு காமதேனு
நெடிதான செம்புலிகளனேகங்கண்டேன், தரங்கொண்ட
தேவதா விருட்சமுண்டு தழைதின்றால் தேகமது கர்ப்ப
மாமே. 326

கற்பமுண்ட சித்தர்களு மனேகமுண்டு காலவரை
கோடிவரையுகாந்தகாலம், தெற்பமுடன் சமாதியிலே
நின்றுகொண்டு தேவதா பூசையுடன் சிரங்குனிந்து, விற்
பனராய் சாத்திரங்கள் யாவுங் கொண்டு வேதாந்த தாய்
தனையே மனதிலெண்ணி, பொற்புடனே தான்பணிந்து
சதாநிர்த்தந் தான் போற்றியஞ் சலிசெய்து புகழுவாரே.

புகழான வஞ்சலியைக் கண்டுயானும் பொங்கமுடன்
திரும்பியே மலையிற்சென்றேன், சகழான மண்டபமும்
ஓடைகண்டேன் தாக்கான சூரியாள் சந்திரனுங்கண்
டேன், துகழான முக்கடிகை கண்டேன்யானும் தோற்ற
வில்லை மறுபடியும் பரிதிகாணேன், மிகழான நட்சத்திர
மிருபத்தேழு மிக்கடுவாரு கடிகைதனில் கண்டிட்டேனே.

சித்திரகிரி பருவதம்

கண்டிட்ட மறுகாலும் படியிலேறிப் பார்ப்பதற்கு
வென்மனங் கேளாமற்றான், துண்டிட்ட சித்திரகிரி பக்
கஞ்சென்றேன் துரைகோடி வழிகோடி தெரியவில்லை,
கொண்டிட்ட மலைமீதி லேறிப்போனேன் குறிப்புடனே
தனிவாசல் தாளணைந்து, விண்டிட்ட கதவருகில் யானுஞ்
சென்று விருப்பமுடன் கைதட்டி நின்றேன்பாரே. 329

தட்டிநீ யாரென்று யென்னைக்கேட்டார் தயவுனே
காலாங்கி தனைநினைந்து, முட்டியுடன் றாள்பணிந்து
வணங்கிநின்று முடவனும் போகரிஷி யென்றுரைத்தேன்.
சட்டமுடன் குளிகையது பூண்டு கொண்டு சாங்கமாய்
மேருகிரி காணவந்தேன், திட்டமுட னெந்தனுக்கு வுப
தேசங்கள் சிறப்புடனே போதிக்கத் தொழுதிட்டேனே.

தொழுதிட்ட சித்தர்முனி கோடாகோடி தோற்ற
முட னெனைப் பார்த்து வாவென்றேதான், முழுதிட்ட
பாலகனை மேருகாண முழுதிலும் வந்ததுனக்கு குற்ற
மல்லோ, தழுதிட்டு வந்தவுனைச் சபிக்கவென்று சட்ட
முடன் சொல்லுகிறே மைந்தாவென்றார், அழுதிட்டே
னப்போது என்னைப்பார்த்து அங்ஙனவே யாதரிக்க
மனங்கொண்டாரே. 331

மனங்கொண்டார் சித்தர்முனி சிலதுபேர்கள் மதித்
துமே ஞானோபதேசஞ்சொல்ல, சினங்கொண்டார் சித்
முனி சிலதுபேர்கள் சீறியே யென்பேரிற் கோபங்கொண்
டார், கனங்கொண்ட சித்தர்களை வணங்கியானும் கால
டியில் தொழுதிட்டேன் பலகாலுந்தான், தினங்கொண்டு
யெந்தனுக்கு விசேஷஞ்சொல்லி திரளான துறப்புமுதல்
காட்டிடாரே. 332

சித்தர்கள் சித்திரகிரியைப் பொன்னாக்கிவிட்டது

காட்டினார் சுரங்கமுதல் குகைகள் யாவும் கருவான
மறைப்புமுதல் யாவுஞ்சொல்லி, மூட்டினார் சித்தரகிரி பர்
வதத்தை முனையான மூலிகைகள் முழுதும்பூகி, மாட்டி
னார் துருத்திக்கொண்டு ஊதிக்காட்டி மகாமேரு சாரலைப்
பருக்கச்செய்தார், நீட்டமுடன் போகரிஷி யானும் பார்த்து
நீணிலத்தில் மதிமயங்கி விழுந்திட்டேனே, 333

போகர் வச்சிரகண்டி பெற்றது

விழுந்திட்ட வடியேனை ரிஷிகள் பார்த்து விருப்ப
முடன் மூர்ச்சையது தெளியவென்று, அழுந்திட்ட வெந்
தனுக்கு சளைகள்தீர அருமூலி கன்றனையே நசியமீய்ந்தார்,
எழுந்திட்டு யானுமங்கே சரணஞ் செய்தேன் எழிலான
மறைப்புமுத லுளவுசொன்னார், முழுந்திட்ட தாவடவாம்
வச்சிரகண்டி முடிமேலே தான்போட்டார் சித்தாதாமே.

சித்தர்முனி ரிஷிகள் தவயோகிதானுஞ் சிறப்பாக
வெந்தனுக்குவுபதேசித்து, கத்தனென்னுங்கைலாச
மேருதன்னைக்காண வென்று சிகரம்வரை செல்வதற்கு,
சுத்தமுடனடையாளங் கையிலீந்து சுகமுடனே மேரு
வரைக்கடந்துபோக, சத்தமுடன்றானிருக்குங்கு கையிற் 335
சென்று சாங்கமுடன்போவதற்கு விடைதந்தாரே.

விடைதந்தாரெந்தனுக்கு சித்தர்தாமும் வெளிப்பட்
டேன் மேருகிரி வரையிற்சென்றேன், மடையுடனே சுனை
யுண்டு குகைதானுண்டு மாற்கமுடன் சித்தர்களோ
கோடாகோடி, நடையுடனே யவர்களிட பாதஞ்சென்
றேன் நாதாக்களிருப்பிடமுங் துறையுங்கண்டேன், சடை
யுடனே ரிஷிதேவர் தவத்தில்நிற்க சாஸ்டாங்கம் பணிந்து 336
தெண்ட நிட்டேன்பாரே

போகர் கிரேதாயுக சித்தரைகண்டது

பாரேதானவர்களிடம் பற்றிப்போனேன் பதிவாக
திருமுடியை காய்த்துநின்றேன், சீரேதானெந்தனுக்கு
கருவுசொன்னார் சிறப்பான மூலியுடவுளவுசொன்னார்,
நேரேதான்கிரேதாயி யுகத்திலப்பா நெடிதானசமாதியி
லிருந்தோமென்றார், நீரேதான் பூலோகஞ்சென்றாயானால் 337
நேர்ப்புடனே யெமைநினைத்து துதியென்றாரே.

துதிக்கையிலே நினைத்த காரியந்தான் துப்புரவா
யொவ் வொன்றுஞ் சித்தியாகும், மதிப்புடனே யின்ன
முண்டு மனேகசித்தர் மகாகோடி ரிஷிமுனிவர் சொல்லப்
போமோ, கொதிப்புடனேயவர்மனது நோகாமற்றான்
கொண்டவணைத்துக் கார்க்கவென்று, மனதிலெண்ணி
நிதிப்புடனே சதாகாலம் பூசைசெய்து நேர்மையாய் 338
வாழவே வசனித்தாரே.

போகர்துவாபரயுக சித்தரைக்கண்டது

வசனிக்க மேருவுக்கு கடைபாகத்தில் வாகான குள
முண்டுகுகை தானுண்டு துசனிக்ககருஞ்சா மரைமரமு
முண்டு துடியான கருநெல்லி மரமுமுண்டு, தசனிக்க
வேலக்காய் மரமுமுண்டு தாக்கான கருவேங்கை விருட்ச

முண்டு, குசனிக்கமடையொன்று வாருரென்றுண்டு குறும்பாரம் சித்தர்களைக் கண்டேன்தானே. 339

தானுனசித்தர்களில் குருக்கள் மார்க்கம் கோடிசூரியர் போல் பிரகாசிப்பார், கானுனவாற்றருகே வந்துநிற்பார் கருவான சாத்திரங்கள் தர்க்கஞ் சொல்வார், பானுனசிவ யோகந்தன்னைச் செய்வார் பாங்குடனே மனோலயத்தை தாவிநிற்பார், தேனுனவ மூர்தமதுமுண்டு சித்தர் தோற்றமுடன்வாசமது செய்வார்பாரே. 340

போகர் ஆஸ்தானகிரிகண்டது

பாரான மேருகிரி தன்னைவிட்டு பாங்குடனே குளிகைதனை பூண்டு கொண்டு, நேரானவாஸ்தான கிரியைக் காண நேர்மையுடன் விடைபெற்று வந்தேயானும், காரானமலைதனிலே யேறிப்போனேன் கண்டேனே சித்தருட சமாதிதன்னை, நோரானவெட்டவெளி தன்னைக் கண்டு நின்றிட்டேனொருவரையுங் காண்கிலேனே. 341

காணவேவென்மனது கலங்கும்போது கண்டேனே சித்தொருவர் முன்னேநிற்க, தோணவேகாயாதி கற்பங் கொண்டதோரான சித்தொருவர் மாயாசித்து, நாணவே வென்னெதிரில் ரூபங்கொண்டு நளினமுடன் றுன்சபிக்க வந்தயென்னை, பாணம்போல் கோபமதை தானடக்கி பட்சமுடனுபதேசஞ், செய்திட்டாரே. 342

செய்யவே யெந்தனுக்கு தீட்சைமார்க்கம் செப்பினுரடியேனும் பிழைக்கவொன்று, பையவேசித் தொருவராயிரம்பேர் படைகூட்டந்தன்னுடனே சூழ்ந்துகொண்டார் தொய்யவேவடியேனுந் திகிலடைந்தேன் தோன்றவில்லையெந்தனுக்குயென்ன செய்வேன், வையவே யடியேனும் காலாங்கி தம்மைவரங் கொடுக்க மனதிலே நினைத்திட்டேனே. 343

நினைத்திட்டேனென்சாமி குருவேயென்றேன் நினைத்ததொரு வண்மைதனை யறிந்துகொண்டார், முனைந்திட்டு சித்தரெல்லாம் வென்னைப்பார்த்து முழிமிரட்டி காலாங்கி நினைத்தாயல்லோ, கனைந்திட்டு மனோலத்தை யறிந்துகொண்டார் காலாங்கிநாயனுடைய சீஷனென்று புனைந்திட்டு வென்மீதில் பட்சம்வைத்து புகழ்ச்சியுடன் கொண்டணைத்தா ரென்னைத்தானே. 344

என்னையே கொண்டுசென்று, குகைக்குள்வைத்து யெழிலான வித்தைகளைக் கற்பித்தேதான், பொன்னையே யிருக்குமிடந்தானுங்கண்டு புகழான வதிசயங்களெல்

லாங்காட்டி, தன்னையே குருவர்க்கமென்றேசூட்டி தயவாகவுயிர் கொடுக்குமூலிசொல்லி, பின்னையே போகவெனக் குறுதிகூறி பிழையென்று வுத்தாரஞ் சொல்லிட்டாரே.

சொல்லவே விடைபெற்றுப் படியிறங்கி சூட்சமுடன் குளிகைதனை பூண்டுகொண்டு, மெல்லவே யடிநோக்கித் திரும்பும்போது மேலான ரிஷியொருவ ரங்கிருந்தார், வெல்லவே யாரென்று யென்னைக் கேட்டார் வேகமுடன் றுன்யயந்து போகரென்றேன், புல்லவே யேன்வந்தாய் குகைதான்மீது பொல்லாத மனுஷர்கள் வரலாகாதே.

போகர் செத்தவரை எழுப்புவதை தடுப்பது

ஆகாதுயிக்கிரியி லேன்தான்வந்தாய் ஆக்கினைகள் மிஞ்சிவிடுமுந்தனுக்கு, சாகாது வரமூலி சித்தர் தந்தார் சாபமது கொடுத்து விட்டேன் போபோவென்றுர், போகாதுமற்றதொரு வித்தையெல்லாம் பொங்கமுடனுனக் களித்தோம்சாபமில்லை, நோகாதுசித்தர்பத்தர் மனம் வேகாமற்றுன் வேதினியில் தந்திரமாய் நடந்துகொள்ளே.

கொள்ளவே வெகுகோடி மனுக்கள்தாமும் குவலயத்திலுன்னை யொருசித்தனென்பார், மெள்ளவே செத்தவரை யெழுப்பும் வித்தை மேதினியில் தள்ளுவது மெத்த நன்று, துள்ளவே லோகமெல்லாஞ் சித்தாய்ப்போகும் சூட்சத்தை யொருவருக்குஞ் சொல்லப்போமோ, அள்ளவே வனேக விதவித்தையெல்லா மன்புடனே யுனக்கீய்ந்தோம் பிழைபோவென்றுர்.

கெண்டபேரண்டரிஷிபட்சி போகரைக்கண்டது

போவெனவே விடைபெற்றுப் படியிறங்கி பூதலத்தில் யான்வரவே நோக்கங்கொள்ள, காவெனவே கேண்டபேரண்டபட்சி காணவே யெந்தனையுங் கையமர்த்தி, சாவெனவேயுன்னை நானிப்போதல்லோ சபிக்க வந்தேனென்ற வருகில்வந்து, கூவெனவே சத்தமிட்ட தொனியுங்கேட்டு கோடிவரைப்பட்சியங்கே சூழலாச்சே.

சூழவேநான் பயந்து நடுநடுங்கி சொல்லவொண்ணுதிகிலுடனே யேக்கங்கொண்டு, தாழவேமூர்ச்சை யுடன் கீழ்விழுந்து தடுமாறி திசைமாறி நினைவுகெட்டு, ஆழவே யடியேனுமிருக்கும்போது அங்ஙனவே கெண்டபேரண்டபட்சி, மீளவேயெந்தனுக்கு சஞ்சிமூலி யின்பமுடன் றுன் கொடுக்க பிழைத்தேன்பாரே. 350

பிழைக்கையிலே யெந்தனையும் பட்சிபார்த்துப் பிரியமுடன் யாரப்பாவென்றுகேட்க, அழைக்கையிலே யானு

மங்கேகிட்டிப்போய் அன்பான பட்சியிடமருகில் நின்று
தழைக்கவே வென்பேரு போகரென்றேன், தயவுடனே
யிக்கிரியைக் காணவந்தேன், முழக்கமையுடன்சித்தர்
முனிரிஷிகள்கூடி முக்கியமா யுபதேசஞ் செய்திட்டாரே.

செய்யவே விடைபெற்று குளிகைபூண்டு செயலு
டனே மானிடர்கள் பிழைக்கவென்று மெய்யவே மேதினி
யில் போறேனென்றேன் மிக்கான பட்சியுமெனைத்தடுத்து
பையவே யெந்தனுக்குப் பிழைக்கு மார்க்கம் பலவிதமாந்
தொழிலனைத்து முறைக்கலாச்சு, உய்யவே கயாதிகற்பங்
கொண்டேன வுற்பனமாம் வைப்புமுதல் தெரிந்திட்
டேனே. 352

போகருக்கு பட்சியுபதேசம்

தெரியவே பட்சியுட யுபதேசத்தால் தேசத்திலுள்ள
தொருமாற்கமெல்லாம், புரியவே யெந்தனுக்குக் காண்
பித்தேதான்பூலோகம் போவதற்கு விடையுந்தந்து, சரி
யவே கிரியை விட்டுக்கீழிறங்கி சாந்தமுடன் வந்துநிற்
கும் வேளைதன்னில், உரியவே பொன்பட்சி வொன்று
கண்டேன் வுத்தமனே வதன்பெருமை சொல்லக்கேளே.

போகர்பொன்பட்சியைக் கண்டது

சொல்லவே பொன்பட்சிக் கண்டேன்யானும் சுத்த
முடனதனருகில் வந்துநின்றேன், வெல்லவே, யெந்தனை
யும் பார்த்துமேதான் மேதினியில் யாரென்று யென்னைக்
கேட்க, புல்லவேயென்பேரு போகரென்றேன் புகழான
மேருகிரிக்காணவென்று, மெல்லவேகுளிகையது பூண்டு
கொண்டு மேதினியிலிட்டுமல்லோ வந்திட்டேனே. 354

வந்திட்டேன்யென்றலுமே யென்னைப் பார்த்து
வணக்கமுடன் யென்பேரில் கிருபைவைத்து, பொங்கிட்டு
யென்னுடனே வாவென்றென்ன பொலிவாகப்பட்சியுடன்
குளிகைபூண்டு, பந்திட்டு யான்பறந்தேன் பட்சிமாற்கம்
பாகுடனே கடலோரம் போயிருந்தேன், தந்திட்டதெந்த
னுக்கு வாணிமுத்து தாக்கானமாலையது பூண்டேன்பாரே.

பூண்டேனே கடலோரம்விட்டுநீங்கி பொங்கமுடன்
மேருவரையேறிப்போனேன், மீண்டேனேகாணுறு குகை
தான் தாண்டி மிக்கானசுனை முதலுங் கண்டேன்யானும்,
தாண்டியே மேலைவரை யேறிப்போனேன் தடாகமுண்டு
வதிசயங்கள் கண்டேன் யானும், வேண்டியேதவசுடனே
ரிஷிகள் கோடி விரைவான செந்நிறக் கொக்குமாமே.

போகர் அதிசயம்பார்த்தது

கொக்கான சிவந்ததொரு காக்கைகண்டேன் குயிலு
டனே மயிலாடல் பாடக்கண்டேன், மிக்கான செம்புளி

யும்பசுவுங்கூட மேன்மையுடன் தடாகமதிலிருக்கக் கண்
டேன், வெக்கான புகையுடனே பனிகள் தன்னில் வெள்
ளானைமேய்ந்துவரும் வண்மைகண்டேன், சுக்கான பாறை
தன்னில் பொன்னுங்கண்டேன் சூட்சமுடனுளியுட மிரு 357
கந்தானே.

தானனகல்லானை யானுங்கண்டேன் தாக்கான சிங்க
முதல் வேங்கைகண்டேன், பானுனபடிகமென்ற நதியுங்
கண்டேன் பாங்கான கெம்பாறு குகையுங்கண்டேன்,
வேனுனசஞ்சீவி மூலியுண்ட வெளியான செந்தூரக்காடு
முண்டு, மானுனகுளத்தருகே சமாதிகோடி மதிப்பான
சித்தர்களைக் கண்டிட்டேனே.

கண்டிட்டேன் சித்தர்களை வணங்கியானும் கைலா
சம் பார்க்க வென்றுகளிப்பாய் வந்தேன், கண்டிட்டேன்
பொன்கருடன் வெள்ளை காக்கை கண்காணுபச்சைமலை
சித்தர்கண்டேன், சண்டிட்டேன் ரிஷிமுனிவர் ஞானி
கண்டேன் காலாங்கி நாதரையான் மனதிலெண்ணி,
கண்டிட்டேனவர்பாதம் பணிந்துநின்றேன் கடாட்சித்து 359
வேந்தனுக்கு வருள்சொன்னுரே.

அருள்சொன்னுர்வேதாந்த மெனக்களித்தார் அப்
பனே சூட்சுமத்தின் நேர்மைசொன்னுர், பொருள் சொன்
னுர் சித்தர்களின் மறைப்பு மாற்கம் பூட்டினுர் கருதிறை
மறைப்புயாவும், இருள்சேர்ந்த காட்டகத்திலென்னைக்
கொண்டு யேற்றமுடன் காயாதி கற்பந்தன்னை தெரிவித் 360
தாரே.

தெரிவித்தா ரஞ்சனங்கள் மாரணங்கள் தெளிவான
மோகனங்கள் வசியம்யாவும், புரிவித்தார்வாதமுதல்
யோகமார்க்கம் புகழான ஸ்தம்பனமு மோகனந்தான்,
பரிவித்தார் தேவதைகள் வருகுமாற்கம் பாங்கான செப்
பிடு நல்வத்தைமாற்கம், அறிவித்தார் கோகர்ணசால 361
மாற்க மகத்தான பிரமவித்தை மதீதந்தானே.

அநீதமாம் சகலசித்துவஷ்டசித்து அன்பானலோகம
தில் பொடிகள்வித்தை, கதீமாஞ்சக்கரங்கள் கரணமாற்
கம் கண்கட்டி வித்தைமுதல் சாலமாங்கம், பதீதமாம் பச்
சிலையில் வித்தைகோடி பகற்கால நட்சத்திரக்காலவித்தை
துரிதமுடன் மேகத்தில் பறக்கும் வித்தைசூட்டினுரெந்த 362
னுக்கு சூட்சம்பாரே.

சூட்சமுடன் மோடியிலனந்தங்கோடி சொல்ல
வொண்ணுபரிசனங்கள் தூம்பரவேதை, மாட்சமுட
னுழ்வீடுவதீதவித்தை மகத்தான காலிகாஷாயமாற்கம்,

ஆட்சானவித்தைகளில் துரைகள்கோடி அப்பனேகூற வொண்ணு குறளிவித்தை தீர்க்கமுடன் தந்திரமாயனந் தம்பேர்க்கு திறகுடனேயெமக்களித்தார் தெளிவாய்த் தானே. 363

போகர் திருப்பாற்கடல்கண்டது

தெளிவானகடல்முகமாஞ் சாகரத்தில் திறளான மாயவனுங் கூடைந்தநீராம், கனி வானவெண்ணெயது மெழுகைப்போல கடலோரம் பாறைகள் போல்மிதக்கும் வண்ணம், மொளிவான நவகோடி ரிஷிகளப்பா முயற்சி யுடன் கரையோரந் தவமிருப்பார், வெளியான சமாதியிடம் சென்று போனேன் விருப்பமுடன் யெந்தனை நீ யாரென்றென்றுரே. 364

ஆரென்றுகேட்டவுட னடியேன்தானும் அங்ஙனவே யடிவணங்கி தாழ்மைகொண்டு, ஊரென்றுந்தெரியாமல் குளிகைபூண்டு வுத்தமனே தேசம்விட்டு தேசம்வந்தேன், காரென்றுயெனைக்கார்க்க யேழ்மைகொண்டு கர்த்தாவே கெதியென்று சரணஞ்செய்து, மேரென்றகிரியைவிட்டு மேற்புரத்தில் மேன்மையுடன் காணவந்தேன் போகர் தானே. 365

நான்தானே போகரென்றேன் காலாங்கிதமமை நல முடனே தானினைத்து தொழுதிட்டேனே, பாங்கான வென்மீதில் கிருபைவைத்து பாகமுடன் யோகத்துக் குறுதிசொன்னுர், மான்தோலிலாசனத்தினிலிருந்து மாற் கமுடன் சித்தரைப்போ லுருவங்கொண்டு, மேன்மையுட னுபதேசம் யாவும்பெற்று மேதினியில் பிழைக்கவென்று வந்திட்டேனே. 366

வந்திட்டேன் சீனபதிதன்னிற் சென்றேன் வாகு டனே கற்றதொருவித்தையெல்லாம், தந்திட்டேன் மாணுக்கன் பிழைக்கவென்று தாரணியிலெந்தனையு மெச் சியேதான் குந்திட்டேன் சீனபதி மார்க்கமெல்லாம் குறிப் புடனேசால மிகச்செய்தேன் யானும்முந்திட்டடுதே சாதி தேசமெல்லா முயற்சியுடன்ருன் திரிந்துவந்தேன்பாரே.

பாரேதான் விளக்கொளிதாள் கையிலேந்தி பாழ் கிணற்றில் செல்லுகின்ற பான்மைபோல, சீரேதான் சகலமுந்தானறிந்து நெடிதான வித்தைதனைக் கற்று மென்ன, கூரேதான் யோகத்தின்மாற்கங்காணுர் குவல யத்தில் கோடிபேர் காணலாமே. 368

காணலாம் காயாதிகர்ப்பம் கொண்டோர் காசினியில் விழலாகப்போனபேர்கள், மாணவேசிவயோகந் தன்னிற் சென்று மாண்டிறந்தோர் கோடான கோடிபேர்கள்,

தோணுதசரக்கெடுத்துச் சுழலைநடந்து தொல்லுலகில் மாண்டவர்கள் கோடாகோடி, நாணவே சாத்திரங்கள் பார்த்துக் கெட்டு நலமழிந்து போவார்தாமே. 369

சிறுகண்ணுகவேதை

தாமேதான் நாகமது பலமேவாங்கி தாக்கான யிலுப்பநெய்யில் வுருக்கிச்சாய்த்து, நாமேதான் கெந்தி யொருபலமேவாங்கு நலமான ரசமதுதான் பலமேதூக்கு, வேமேதான் பழச்சாறு தன்னுலாட்டி விருப்பமுடன்ருன ரைத்துக் கவசஞ்செய்து, போமேதான் ரவிதனிலே காயப் போடு பொங்கமுடனேட்டிலிட்டு சீலைசெய்யே. 370

செய்துமேகுக்குடமாம் புடத்தைப்போடு சிறப்பான புடமாறி யெடுத்துப்பாரு, நைதுமேகளங்கினுட மார்க் கந்தன்னை நாதாக்கள் தங்களால் சொல்லப்போமோ, வெய்துமே களங்குடனே சூதஞ்சேர்த்து விருப்பமுடன் பரிசரியாய் கூட்டியேதான், கொய்துமேதாளகமும் கணக் காய்க்கூட்டிக் கொப்பெனவே செயநீராலரைத்திடாயே.

அரைத்துமே மேருவென்ற கும்பிக்கேற்றி அப்பனேத் வாலுகையி லெரித்துமேதான், திரைத்துமே குப்பியை தான் சிலாகையிட்டுத் திறமுடனே பார்க்கையிலே சிவப்பு மெத்த, பரைத்துமே செந்தூரப் பதனம்பண்ணு பாங் கான வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, முறைத்துமே தானுருக்கி குருவொன்றிய முதிர்வான மாற்றதுவு மெட்டதாமே. 371

எட்டான மட்டமதுநாலதாகும் யெழிலான தங்க மது வொன்று சேர்த்து, தட்டானமூசை தனிலுருக்கிதிரு தாக்கான வாரடித்துப் புடத்தைப்போடு, கட்டானதங்க மது விரண்டுக்கொன்று கருவான புடத்தங்கம் நயப்பு காணும், கிட்டானவேதையிது சித்தர்வேதை கெடியான ரிஷிமுனிவர் செய்வார்தாமே. 372

மிருதார்சிங்குவேதை

தர்மமாமிரு தாருசிங்கி சேர்த்தான் தயவான செவ் வாலம் பழந்தான்கொண்டு, பூமானதேங்காய் போல ரைத்துருட்டிப் பொலிவான சிங்கியைத்தான் பொதிந்து மூடு, காமானசீலையது வலுவாய்ச்செய்து கனமானபுட மதுதான் போட்டாயானுல், வேதானசிங்கியது கட்டிப் போகும் வெடியான யுப்புதுவுங்கூடகூட்டே. 373

கூட்டியேதுருசுடைய சுன்னந்தானும் குணமான சிங்கியுடன் சமனுய்ச்சேர்த்து, மாட்டிகமாய் தானரைப்

பாய் செயநீராலே தாழ்வாகப்பில்லை தட்டிக்காயவைத்து
மாட்டிகமாயோட்டில் வைத்துச் சீலெசெய்து மகிழ்ச்சி
யுடன் காயவைத்து புடத்தைபோடு, நோட்டக மாயாற்
கபின்னெடுத்துப் பாருநொடிதான செந்தூரங்காண
லாச்சே.

காணவே செந்தூரம் களஞ்சிதூக்கு கருவான வெண்
காரம் காற்கழஞ்சி, தோணவேயிரண்டு மொன்றாய் தான
ரைத்து துப்புரவாய் ரவிதனிலேசரி யாய்த்தூக்கி,
மாணவேமூசைதனில் செம்புருக்கி மதிப்புடனே கிராச
மது தானேயீவாய், பாணம்போல் செம்பதுவு மூறல்நீக்கி
சுமைநிறம் செம்பொன்னுநிறம்தாமே. 375

நிறமான செம்புதனை யெடுத்துப் பார்க்கநொடிதான
ஊறலது வற்றுப்போச்சு, திறமான நிகர்செம்புசேர்த்து
திறலான மூசைதனிலுருக்கிப்பாறு, கறமானமாற்றதுவு
மெட்டதாகுங் கருவான வெள்ளியது கணக்காய்ச்
சேர்த்து, உறவானவாறடித்துப் புடத்தைப்போடு உத்
தமனே பசுமை நிறமாகுமாமே. 376

பொன்னிமிளைவேதை

ஆமப்பா சொல்லுகிறேன் நிமிளைவேதை அப்பனே
மாணுக்கன் பிழைக்கவென்று, தாமப்பா படிகமென்ற
நிமிளை தன்னை தாரணியில் தேர்ந்தெடுத்து தாம்பரத்தில்,
வேமப்பா சூதமது கூடச்சேர்த்து விருப்பமுடன்றான
ரைத்துதாம்பூரத்தில், போமப்பா பழச்சாற்றி லரைத்து 377
மைபோற் பொங்கமுடன் சாந்தமாய்ப் பூசிப்போடே.

போடவே ரவிதனிலே காயவைத்துப் பொங்கமுடன்
வகல்தனிலே வைத்துமூடி, நீடவேசீலையது வலுவாய்ச்
செய்து நேர்ப்பான புடமது நான்கோழியாக காடவே
கனலாறியெடுதுத்பாரு கனமான செம்பதுவுமூறலற்று,
மூடவேதங்க நிறம்போலேயாகும், முயற்சியாய் வேதை 378
யிது சொல்லொண்ணாதே.

பொல்லவே செம்புதனை யெடுத்துப்பாரு சொர்க்க
முடன் சொகுசாவி நிறம்போலாகும், வெல்லவே செம்பு
வித்தை யெவர்தான் செய்வார் வேதாந்ததாயின துவருளி
ஞலே. புள்ளவேகுளிகையது பூண்டு கொண்டு புக்கி
னேன்தேச தீவாந்தாங்கள், செல்லவேயான் சென்று
கற்றவித்தை செகத்திலே மானிடர்கள் பிழைக்கத்தானே.

நீலவானத்தயிலம்

பிழைக்கவே யின்னமொரு தயிலஞ் சொல்வேன்
புகழான வராகமொன்று பிடித்துவந்து குழைக்கவே

துருசுடனே காரந்தானும் குணமான கெந்தியுடன் தாள
கந்தான், மழைச்சுவேலிங்கமது வீரந்தானும் மகத்தான
பூரமுடன் கெவுரிவெள்ளை, தழைக்கவே துத்தமது சூதந் 381
தானும் சார்பான சாரமது தானுங்கூட்டே.

கூட்டவே சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி குமுறவே
குழியம்மி தன்னலாட்டி, தாட்டிகமாய்தான் பொடித்து
வராகந்தன்னில் தாக்காகத்தான் கீறித்தூவிதூவி, மாட்
டிமையாய் வராகமதை சாடியிட்டுமதிப்புடனே மேல்மூடி
சீலெசெய்து நோட்டமுடன் மண்மறைவில் புதைத்துப் 382
போடு நோக்கான மண்டலந்தான் சென்றுபாரே.

சென்றுபார் புழுவதுமிகவேயாகி சீரானபரும் புழு
வும் சிறியதாகும், வென்றுபார்புழுவெடுத்து சீசாவுக்குள்
விருப்பமுடன்தானடைத்துச்சீலை செய்து, பன்றாகவென்
னீறிற் பிடித்தாயானால் பாங்கான நீலநிறத்தயிலமாகும்,
குன்றான தயிலமதையெடுத்துப் பாரு கொற்றவனேடவ 383
னிலே தடவிப்போடே.

போடவேசெம்பினிலே தடவிப்போடுபொங்கமுடன்
மாற்றதுவுயேழதாகும், நீடவே வெள்ளிதனிலாறதாகும்
நெடிதான மட்டது வன்னியீறும், கூடவேபொன்னதுவு
மாற்றுமெத்தக்குணமான தயிலமது சொல்லப்போமோ,
பாடலேபோகரிஷி சொன்னமாற்கம் பாங்கான மானிடர் 384
கள் பிழைக்கத்தானே.

வெள்வங்கம்நீர்வாங்க

பிழைக்கவேயின்னமொரு கருமானங்கேள் பேரான
வங்கமது சேரைவாங்கு, தழைக்கவே பாஷாணசுருமா
வோடு தாக்கான இரசமுடனே காடிக்காரம், எழைக்கவே
வறுவசை செயங்நீர் தன்னால்ஏற்றமுடன் தான்னரைத்து
வங்கத்தின்மேல், குழைக்கவே பூசியதை தடவிப்பின்பு 385
குமுறவேகரியோட்டில் பொதித்துமூடே.

மூடவேகுக்குடமாம் புடத்தைப்போடு முனையான
வங்கமது நீரைவாங்கி, நீடவேதுய்யானுக் கொப்பதாகும்
நெடிதானவித்தையிது சொல்லப்போமோ, கூடவேவெள்
ளிதனை சிலவுசெய்து குறிப்பாகநிஷ்டையிலே யிருந்துக்
கொண்டு, தேடவேசின்மயத்தை யாராய்ந்தோர்ந்து சிவா 386
னந்தலகிரியிலே நின்றுதாக்கே.

கரிவங்கவெட்டை

தாக்கவேகரிவங்க வெட்டைகேளும் தயவானதாளக
மும் பலந்தான் வாங்கிநோக்கவே மிருதாருசிங்கி தானும்
நொடிதாகத் தானரைத்து வங்கத்தின்மேல், தேக்கான

ரவிதனிலே தாயவைத்து திறமாகவோட்டிவிட்டுச் சீலை செய்து, போக்கானகோழியென்ற பியமேபோடு பொங்க முடன்வெட்டையது யாகும்பாரே. 387

பாரேதானிப் படியேபுடமேபத்து பாங்காகப் போட்டு வரபலனைக்கேளு, சீரேதான் வங்கமது வெட்டையாகி சிறப்பாக நொருங்கியது மீறநிற்கும், தூரேதான்வெட் டையது வொன்றே யாகும்துடியான செம்பொன்று வெள்ளியொன்று, நேரேதான் தானுருக்கியெடுத்துப்பாரு நிலையானகளங்கம் போலாகுந்தானே. 388

தானானவெள்ளி யென்றகளங்குதன்னை தாக்கான கரியோட்டிலூதிப்போடு, வேனானவெள்ளியது களங்கு நீங்கி விருப்பமுடன் மாற்றதுவுமாறதாகும். கோனா மட்டமது நாலுக்கொன்று குணமான தங்கமதுவொன்று கூட்டி, பானானமாற்றதுவு மிகுதியாகி பழுப்பான தங்க மது காணுந்தானே. 389

காணவே வுப்புக்கும் காவிக்கேகா கனமானவங்கமது தங்கமாகும், பூணவே செகசோதி தன்னைப்பார்த்துப் பொங்கமுடன் சின்மயத்திலிருந்து கொண்டு, வேணவே சுடரொளியின் லபியைப்பார்த்து மிக்கான வஷ்டாங்க யோகஞ்சென்று, ஊணவே குருபதத்தை வணங்கிப் பேற்றி வுத்தமனே கடுமையைப்பற்றி நில்லே. 390

லிங்கசெம்பு

நிற்கவே லிங்கமது பலமேவாங்கி நேரான முலைபா லால் சுறுக்குதாக்கு, கற்பமுடன் மேனிச்சார் நாலுசாமம் கருவான தும்பைச்சார் நாலுசாமம், வற்கமுடன் பழச்சாறு நாலுசாமம் வாகனவரமுள்ளி நாலுசாமம், சற்கமுடன் பழச்சாறு நாலுசாமம் சார்வான குமரிச்சார் சாமம்நாலே.

நாலான முசுக்கைச்சார் சாமம் நாலுநல்மானதை வேளைச்சாமம் நாலு, காலான முள்ளங்கிச் சாமம்நாலு கறுத்ததோர் துளசியது சாமம்நாலு பாங்கான தேங்கா பால் சாமம் நாலு, வேலான தேனதுதான்சாமம்நாலு 392
விள்ளவே நெய்யது தான்ஜாமம்நாலே.

சாமமாஞ்சுருக்குடனே கட்டிப்போகும்சார்வான லிங் கமது மெழுகிலோடும், தாமமாஞ்சரக்குவகை சொல்லக் கேளு தளுக்கானவரப் பொடியுஞ்சிங்கிதானும் காமமாஞ் சுருமாவுஞ்காரந்தானும் கடிதான படிகாரம் யுப்புமாகும், பூமமாம்வகைக்கொரு பலமே வாங்கு பொங்கமுடன் 393
குழிக்கல்லில் பொடித்திடாயே.

பொடித்துமே வறுவகை செயநீர்தன்னால் பொங்கா மல் தானரைப் பாய்சாமம்நாலு, துடுப்புடனேதானரைத்து லிங்கந்தன்னில் தொகுப்பாகக் கவசித்துக் காயவைத்து, கடிப்புடனே காவிக்கற் சீலைசெய்து கருவாகக் குழி வெட்டி முழந்தானீளம், மடிப்புடனேவுமிகொட்டி லிங்கம் வைத்து மதிப்புடனே புடம்போடக் கட்டிப்போமே. 394

கட்டியதோர் லிங்கமதை தானெடுத்துக் கணக்காக வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று திட்டமுடன் றான் கொடுத்து வுருக்கிப்பாரு தெளிவானமாற்றதுவு மேழதா கும், நட்டமென்ன பத்திலோர்தங்கஞ்சேர்த்து நயமாக வாரடித்துப் புடமேபோடு, சட்டமுடன்றானெடுத்து யெடுத்துப்பாரு சார்வான புடத்தங்கமாகும்பாரே. 395

பாரேதான் தங்கமதைசிலவு செய்து பாசமென்னுஞ் சாகரத்தை விட்டொழித்து, சீரேதான் கும்பத்திலிருந்து கொண்டு சிறப்புடனே வஷ்டாங்கஞ் சென்றுமேதான், கூரேதான் பீடமதிலிருந்துகொண்டு கோடான கோடி வரைமேலேயேறி, தீரேதான் சொருபவென்ற கலையில் நின்று தீவிரமாஞ் சுழிமுனையைப் பற்றியேறே. 396

பூரக்கட்டுசிடிகைவேதை

ஏறவே பூரமென்ற கட்டைசொல்வேன் யெழிலான கேசரியின் பால்தானாழி, கூடவே சாமமது சுருக்குத் தாக்கு குறிப்பான தொட்டியின் பாஷாணத்தால், தேறவே வறுவகைசெயநீர் தன்னால் தேற்றமுடன்றானரைத்துக் கவசஞ்செய்து, மாறவே ரவிதனிலே காயவைத்து மார்க் கமுடன் புடம்போடக் கட்டிப்போமே. 397

போமேதான் குக்குடத்தில் கட்டிப்போகும் போக் கான சரக்கதுவும் புகைத்துநிற்கும், நாமேதான் சொன்ன படி பூரகட்டை நலமாக மட்டமென்ற பொன் தகட்டில், வேமேதான்வுமிநீரால் தானிழைத்து விருப்பமுடன்தான் தகட்டில் பூசிப்பின்பு, காமேதான் காவிக்குள் கீழ்மே லிட்டு கருதாகபுடம் போடமாற்றுமாமே. 398

மாற்றான செம்பதனில் தாக்கிப்பாரு மகத்தான செம் பதுவும்களிம்பு நீங்கி, கூற்றானகவளையது போலே காணும் குணமாகுபழுப்புனிறம் குன்றிக்காட்டும், வேற் றான வெள்ளிதனில் வாதோகொஞ்சம் விரைவானதேகமது காயகற்பம், ஆற்றான வாயுவென்ற தெண்பதும்போம் அப்பனே போகரிஷி கண்டதாமே. 399

கண்டபடி மாணாக்கள் பிழைக்கவென்று காசினியில் வெகுதூரம் சென்றுயானும், கண்டபடி முறையெல்லாம்

பார்த்து தேர்ந்துகாசினியில் பிழைப்பதற்கு வெகுவாய்ச் சொன்னேன், கண்டபடி யென்னூலை மிகவும் பார்த்துக் கைகண்ட முன்னோரை நண்ணலாகி, கண்டபடி வுள வெல்லாம் பார்த்துத் தேர்ந்து பாரினிலே செய்கிறவன் வாதியாமே. 400

வீரக்கட்டு

வாதியாம் வீரமது பலமேவாங்கி வகுப்புடனே வில்வமது நாற்பதாகும், பாதியாம் வில்வமது பழக்கத்தைக் கீறி பாங்காகத்தான் பொதிந்து சீலைசெய்து, ஆதியாம் மண்மறைவில் புடத்தைப்போடு அப்பனே புடமதுங் கோழியாகும், வேடமதானிப்படியே புடமேபோடு வெடியானநாற்பது பழமுமாமே. 401

பழமான காயதுவும் நாற்பதாகும் பக்குவமாய்ப்புடம் போடக் கட்டிப்போகும், கழமானவீரமதை வுமிநீர் தன்னால் கருவான பொன் மட்டம் தன்னிற்பூசி, குழமான பூங்காவிதன்னிற்குள்ளே பொதிந்துமே புடம்போடத் தங்கமாகும், மழமான வீரத்தின் போக்கு கோடி மகிதலத்தில் மெத்தவுமதிக்கப்போமோ. 402

தாளக்கட்டு

மதிக்கவே தாளகமோர் பலமேவாங்கி மகத்தான தும்பைச்சாற் குமரிச்சாரொக்க, கதிக்கவே பழச்சாற்றால் குறுகையாட்டி கவசமாய்தாளகத்துக் கங்கிபூட்டி, துதிக்கவே பத்தெருவில் புடத்தைப்போடு துலக்கமுடன் தாளகமும் கட்டிப்போகும், விதிக்கவேயிப்படியே பத்துபுடம் போடு விரைவானதாளகமும் கட்டிப்போமே. 403

கட்டியதோர் தாளகமும் பலமொன்றாகும் கதிப்பான சூதமுடன் கெந்திதானும், திட்டமுடன் வறுகையாஞ் செயநீர் தன்னால் திறமுடனே தானரைப்பாய் சாமம்நாலு, சட்டமதாய் பில்லையது காயவைத்து சார்வாக வில்லையது ஒட்டிவிட்டு, மாட்டமுடன் கோழியென்ற புடத்தைப் போடு மாற்கமுடன் செந்தூரமாகும்பாரே. 404

பாரேதான் செந்தூரம் பதனம்பண்ணு படிகமென்ற வெள்ளி செம்பில் பத்துக்கொன்று, நேரேதான் ருனுருக்கிச் செந்தூரத்தை நேர்பாகத் தான்கொடுக்க வாங்கிக் கொள்ளும், சீரேதான் கரியோட்டிலூதிப்போடு சிறப்பாக மாற்றதுவு மெட்டதாகும், கூரேதானறுக்கோர் தங்கஞ் சேர்த்து குறிப்பாகப் புடம்போடத் தங்கமாமே. 405

தங்கமது பசும்பொன்னும் வர்ணமெத்த தயங்காது காவிக்கு முப்புக்கேகா, அங்கமுடன் வாதத்துங்குறுதியாச்சு அப்பனே சித்தர்முனி செய்வாரப்பா, புங்கசித்தி

யெட்டுடனே பெறுவதாகுப் போதமெட்டுங் கொள்ளுவதும் ஞானியாவான், சிங்கமென்றகுருபீடம் பிரமபீடம் சிவப்பான சித்தருட மகிமைபாரே. 406

துருசுகளங்கு

மகிமையாம் துருடைய களங்குமாற்றம் மகத்தான அவமுடனே வைதைபாரு, மகிமையா மயமதுவும் வொன்றேயாகும் மதிப்பான துருசதுவு மெட்டதாகும், மகிமையாமிரண்டு மொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு மாற்கமுடன முரியினாலரைத்துக் கொண்டு, மகிமையாம் சலந்தனிலே கழுவிப்போடு மாசற்றுவயஞ் சேர்த்து சிவக்கும்தானே. 407

சிவப்பான வயஞ்சேர்ந் துருசுதன்னை செழிப்புடனே சட்டிதனில் பரப்பிப்போடு, தவப்பான வாழை நீரதிலே விட்டு தயவாகமூன்றுநாள் ரவியில்வைத்து, கயப்பறவே சூதமதுநாலுக்கொன்று கலறவே தானரைத்து மறுசட்டிட்டு,நயப்புடனே மேற்சட்டி மூடிப்போடு நலலாக சீலை வலுவாய்ச் செய்யே. 408

செய்துமே யடுப்பேற்றி யெரிப்பாய்சாமம் செழிப்புடனே யாறவிட்டு யெடுத்துப்பாரு, நைதுமே செந்தூரமாகும்பாரு நலமான ரசமதுதான் மேலேயேறும், கொய்துமே செந்தூரம் நாலுக்கொன்றி கொப்புடனே வெண்காரங் காலாய்க்கூட்டி, பெய்துமே மூசையிட்டு சீலையது செய்து பிலமாகக் காயவைத்துவுருக் கிடாயே. 409

உருக்கியே செம்பான சளங்கு தன்னைவுத்தமனே வங்கமிட்டுவூதித்தீரு, நருக்கியே காரமுட்டு வுருக்கிப் பாரு நயமான செம்பதுவு மாகும்பாரு பெருக்கியே வெள்ளியது நாலுக்கொன்று பேரான செம்பதுவு வொன்றே சேர்த்து, பருக்கியே தானுருக்கி யெடுத்துப் பாரு பதமான மஞ்சளது மட்டந்தானே. 410

மட்டமது வைந்துக் கோர்தங்கஞ் சேர்த்து மயங்காவாறடித்துப் புடத்தைப்போடு, திட்டமுடன் மாற்றதுவு மிகவேயாகும் திறமானதுசுடைய களங்குவேதை, சட்டமதாய் கண்டருட வேதை மாற்கம் சாற்றவு மெவராலு முடியாதையா, நட்டமில்லை யிவ்வேதை பரிசவேதை நாதாக்கள் செய்யுகின்ற மாற்கம்பாரே. 411

மாற்கமாம் வேதையிது களுக்குவேதை மானிலத்தில் தவயோகி செய்வாரப்பா, தீற்கமுடன் யோகநிலை தன்னிற்சென்று தெளிவாகச் சின்மயத்திலிருந்து கொண்டு மாற்கமுட பிராணநிலை சொரூபம் பற்றி பரகதிக்கு நன்மனதாய் வொடுக்கம்பார்த்து, சேற்கமுடன் திவ்வியகலை தானிறுத்தி சிதம்பரத்தினடனவொளி காணுவீரே. 412

காணவேயின்னமொரு மாற்கங்கேளு கருவான ஊசிக்காந்தம், பூணவேதேன்விட்டு வரைத்துமேதான் பொங்கமுடன் வுருக்கித்திரு, வேணவே சத்தெடுத்து சூதஞ்சேர்த்து விருப்பமுடன் செந்தியது கரலாய்க் கூட்டி, மாணவே வறுவகை செயநீர்தன்னுல் மாட்டா நாற்சாமமறைத்துப் போடே. 412

போடவே ரவிதனிலே காயவைத்துப் பூப்போல தானுதிர்த்து பொடித்துமேதான், நாடவேகாசியென்ற குப்பிகொண்டு நன்மைபெற சீலையது வேழுஞ்செய்து, கூடவேகுப்பிக்குள் மருந்தையிட்டு குறிப்பாகப் பலபத்தின் கல்லால்மூடி, சாடவேசட்டிதனில் மணலைக்கொட்டிச் சார்புடனே குப்பிநடுமையம்வையே. 413

வைத்துமே மணல்கொண்டு மேலேசெம்மி வளமாக சட்டி கொண்டு மூடிச்சீலை, சத்துமே போகாமல் தீயை மூட்டி சாங்கமாய் தானெரிக்கச் செந்தூரந்தான், முத்த முடன் வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று முயற்சியுடன் தான்கொடுக்க மாற்றுங்காணும், சுத்தமுடன் னூதிப் பார் காற்ருயேழு சூட்சமுடன் போகரிஷி வறைந்ததாமே.

வரைந்தாரே மானிடர்கள் பிழைக்கும் வண்ணம் வனுந்திரங்கள் குகைமுதலும் கானுற்கண்டு, துறந்தாரே குளிகையது பூண்டுகொண்டு துரைகோடி மலைகளெல்லாங் கண்டாராய்ந்து, பறந்தாரே மேருகிரிமேலேசென்று பாராதகாட்சி யெல்லாம் பார்த்துமெய்ச்சி, மறந்தாரேசித்தரிடம் விடைகள்பெற்று மருத்துவத்தை வெளியாக்கி மதிப்பிட்டேனே. 414

அயச்செந்தூரவேதை

மதிப்பிட்டே னின்னமொரு கருமானங்கேள் மாசற்ற மனவிரும்பு பலமோவைந்து, கதிப்புடனே பொடிபொடியாஞ் சன்னமாக கண்டிடைக்கு கெந்தி யொருபாலமே பத்து, வெறுப்புடனே கையானின் சாற்றினுலே விளங்கவே நாற்சாம மரைத்துப்பின்பு, துதிப்புடனே பில்லை பில்லை தட்டிக்காயவைத்து துப்புரவாய் சட்டிதனில் வையே. 415

வைத்துமே மேற்சட்டிக் குமரிச்சாற்ருல் வப்பமுடன் தான்மூடி சீலைசெய்து, வைத்துமே தானெரிப்பாய் நாலு சாமம் மயங்காமல் யெடுத்துப்பார் செந்தூரந்தான் தனை யெடுத்து தயங்காமல் மறுபடியும் கையான்சாற்ருல் மாய்த்துமே போகாமல் செந்தூரத்தைப் பொங்கமுடன் னரைப்பாய் சாமம்நாலே. 416

நாலான செந்தூரம்பில்லை தட்டி நலமாக ரவிதனிலே காயவைத்து மேலான சட்டிதனிலே தான்பரப்பி விருப்பமுடன் பில்லைதனை மேலேவைத்து பாலான சட்டி தன்னை கவிழ்த்து மூடிப் பாலகனே முன்போலச் சீலைசெய்து, சீலான வடுப்பேற்றி நாலுசாமம் சிவக்கவேதானெரிப்பாய் கமலமாமே. 419

கமலந்தானெரிப்பாயான பின்பு கருவாகயிப்படியே பத்துமுறைதானும் விமலமாஞ் செந்தூரமிகவே செய்து விருப்பமுடன் கும்பிதனில் பதனம்பண்ணு, புமலமாம் செம்புருக்கி நாலுக்கொன்று புகழுடனே செந்தூரங் கொடுத்துவூது, தமலமாம் ரவிதானுங்கட்டிப்போகும் தாக்கடா மதிதனிலே நாலுக்கொன்றே. 420

ஒன்ருன மதியுடனே ரவியுஞ்சேர்த்து வத்தமனே மாற்றதுவும் பழுக்கும்பாரு, நன்ருன தங்கமது யிரண்டுக்கொன்று நயமுடனே தான் கொடுத்து புடத்தைப் போடு, குன்ருன பொன்னதுவு மேழதாகும் குணமான நயப்புடனே மின்னும்பாரு. அன்ருனவயத்தினிட போக்கைச் சொல்ல அரனுலு மயனுலு முடியாதென்றே. 421

முடியான செந்தூரம் வேதைப்போக்கு முனிகோடி ரிஷிமுதலோர் செய்வார்கோடி, வெடியான செந்தூரங் கொண்டபோது விருப்பமுடன் வாயுவென்ற தெண்பது போம், தடியான தேகமது முருக்கேயேறி தாதுக்களுமிக வலுத்துயிரத்த முண்டாம், குரியான சேத்துமத்தை யடுத்துப்போடும் குணமாகும் தேகமதுயிறுகும்பாரே. 422

காகசிங்கிபற்பம்

பாரேதானின்னமொரு பற்பங்கேளு பாங்கானபலமே வாங்கி சீரேதான் கோமியத்தி லூதிப்பின்பு செழிப்புடனே பசும்பாலி லரைத்துமே தான், நேரேதான் புடமதுவுங் கோழியாக நேர்ப்புடனே தான் போட பற்பமாகும், கூரேதான் பற்பமதுக் கிடையேசூதம் குறிப்பாகத்தான் சேர்த்து வரைத்திடாயே. 423

அரைக்கவே வாராதாரச் சரக்கால் அப்பனே செயநீராய் செய்துகொண்டு, திரைக்கவே நாற்சாம மரைத்தபோது திறமான பற்பமதுக் கிணவே றுண்டோ, நிரைக்கவேபில்லை தட்டிக் காயவைத்து நிறமாகப் புடம்போட பற்பமாகும், முறைக்கவே செயநீரின் போக்கச்சொல்வோம் முழுமக்களான வருமறியத்தானே. 424

அறியவே வரதாரச்சரக்கை அன்புடனே யாமுரைப் போதித்தமாக, தெரியவே காரமுடன் சாரந்தானும் திற

மான துருசுடனே சீனந்தானும், புரியவே வெடியுப்பு கரி யுப்புமாகும் புகழான யித்தனையுமா ராகாரம், சரியவே மாணாக்கள் பிழைக்கவென்று சாற்றினார் போகரிஷி தண்மைபாரே. 425

தண்மையாம் பற்பமது பணமேதூக்கு சார்பான வெண்ணையது தன்னிற்கொள்ள, வண்மையாங்காயமது யிறுகிப்போகும் வாகனதேகமது மின்னல்தோன்றும், குண்மையாம் தங்கமது வலுத்துப்போகும் குணமாக்கும் சிங்கியது கூறப்போமே, நண்மையாய் காயமது கற்றா ணாகும் நாதாக்கள் செய்முறை தானுண்மைபாரே. 426

வீரமெழுகு

உண்மையாம் வீரமதுபலமே வாங்கு ஓங்காரமுள்ள தொரு விலாங்கைத்தேகு கண்மையாங் தயிலமது யிறக் கிக்கொண்டு கசடகற்றித் தயிலமதை சுறுக்குதாக்கு பளபளத்தவீரமது மெழுகுமாகும், தன்மையாம் பரியது வும் பத்துக்கொன்று தாழ்ச்சியுடன்றான் கொடுக்க வாங் கும்பாரே. 427

வாங்கியதோர் மெழுகெடுத்துப் பதனம் பண்ணு வரிசைபெற வெள்ளி செம்பில் பத்துக்கொன்று, ஓங்கியே கொடுத்தாக்கா லேழுகாணா முத்தமனே தொண்டுபணி வேலைவாங்கு, பாங்குபெறமட்டமது நாலுக்கொன்று பக் குவமாம்பரியது மிகவே கூட்டித் தூக்கியேதிரியாதே மைந்தாகேளு, சுத்தமுடன் செய்துமல்லோ வழலைபாரே.

போகர்சித்தர் வழலைமாற்கம் தடுப்பது

வழலையென்றால் வழலையது சொல்லப்போமோ வள மாக நாதாக்கள் பாடிவைத்தார், வழலையென்றால் சுந்தர னார் வழலையல்ல, வராரிஷியுஞ் சொன்னதொரு வழலை யல்ல, வழலையென்றால் மச்சமுனி வழலையல்லவன்பான சட்டமுனி வழலையல்ல, வழலையென்றால் கோரக்கர்வழலை யல்ல வால்மீகர் பாடினதும் விழலையாமே. 429

ஆமேதான் கொங்கணரும் வழலையல்ல அப்பனே இடைக்காட்டார் வழலையல்ல, தாமேதான் டமரகனார் வழலையல்ல தாக்கான சிவவாக்கியர் வழலையல்ல, வேமே தான் சூதமுனிவழலையல்ல மிக்கான புஜண்டரும் வழலை யல்ல, நாமேதான் சொன்னபடி வழலைமாற்கம், மற்று முள்ளசித்தரெல்லாம் பாடினாரே. 430

பாடினாரிந்நூலில் சொன்னசித்தர் பழக்கமுடன் சொல்லவில்லை மறைத்துப்போட்டார், பாடினார் பலபல வாந்துறைகள் சொன்னார் பக்குவங்கள் யாதொன்றுங்

கூறவில்லை பாடினாரவர்கள் நூல்கள் தன்னில் பலபேர்கள் மறைப்புகளைக் காணவில்லை, பாடினார் துறைமுகமுஞ் சொல்லவில்லை பாடிக்கெட்டலைந்தார் கோடிபாரே. 431

கோடான கோடிபேர் நூலைப்பார்த்துக் குவலயத்தில் கெட்டுவிட்டார் சொல்லப்போமோ, கோடான கோடிபேர் குறுக்குப்பாதை குணமுடனே செய்யாமல் மாண்டு போனார், கோடான கோடிபேர்காப்பேடு தள்ளி குடிகெட் டுப் போனார்கள் கணக்கேயில்லை, கோடான கோடி கடை யேபார்த்துக் குலநாசமடைந்தவர் கோடியாமே. 432

கோடியாந்தீட்சை விதியறயமாட்டார் கோலமுட னுப்பெடுக்கும் வகையிங்காணார், தேடியதோர் பொரு ளெலாஞ் சிலவழித்து தேசம் விட்டு தேசம்போய் தெரியா மற்றான், பாடியேசாத்திரத்தைப் பாடிக்கொண்டு பத்து பேரெட்டு பேரொன்றாக்கூடி, நீடியேகாலமது தெரியா மற்றான் நீட்சயமாய் பூவெடுக்கப் போவார்பாரே. 433

போவாரே கானகமெலாந்திரிந்து பூக்காதநிலமெல் லாம் பூர்க்கு மென்று, ஆவலுடன் மலையோரம் பாறை பார்த்து வதுக்கப்பால் காதவழிசென்று தாமும், காவலு டன் நடுச்சாம வேளை தன்னில் கண்ணிருட்டு முன்பாக மதிநேரத்தில், காவலுடன் நடுச்சாமவேளை தன்னில் கண்ணிருட்டு முன்பாகமதிநேரத்தில், காவலுடன் புலி கொண்டு யெழுத்தையோதி சமாதிகட்டித் தானிருந்தார் பலர்பேர் தாமே. 434

பலபேராம் சாத்திரத்தைக் கையிலேந்தி காப்பேடு கடையேடுதெரியாமற்றான், சிலபேரும் கண்கெட்டு முழு தும் பார்த்து சூட்சாதிசூட்சமிட மறியாமற்றான், மல முடனே மூலபுளிமுப்பூவென்று மதிமயக்கந் தெரியாமல் தியங்கியேதான், சலமுடனே கண்ணீருமாய் காலமது தான்கழித்தார் கசடரமே. 435

கசடகற்றி புத்தியுள்ளவிளைஞரானால் காசினியி லென்னூலைக் கருதிப்பாரார், நிசமுடைய சாத்திரமெல் லாமகற்றி நேரான சாத்திரங்கள் மெய்யென்றெண்ணி, விசமுடையமுப்பூவின் மண்ணினாலே வேண்டியதோர் வளையல்களுஞ் செய்வோர்கோடி, குசமுடைய வளையல் கார்க்கார்க் காய்ச்சுமண்ணில் கூறவொண்ணா நஞ்சதுவு மிதக்கும்பாரே. 436

பாரேதானென்னூலைப் பாராவிட்டால் பாங்கானமுப் பூவுங்காணாவிடடால், சீரேதான் வளையற்காற்நஞ்சானா லுஞ் தீவரமாய் தானெடுத்துப் பூமுடித்தால், நேரேதான் வேதையிதுக் கோடும் வித்தை விழலாகப் போகாது வேண்டிச்செய்யே. 437

நூல் தொகுப்பு

செய்யவேயென்னூ லேழாயிரம்பார் செகத்திலே மறைத்ததெல்லாம் வெளியாய்ச் சொன்னேன், பையவே சத்தகாண்டம் பார்த்தாயானால் பாருலகில் நீயுமொருசித்த னாய், தொய்யவே பலபேர்கள் முனிவரானோர் தொல்லுல கில் பாடிவைத்தார் நூல்கள்பேதம், மெய்யவே பலதுறை கள் பார்க்கவேண்டும் மேதினியில் நூல்பார்த்தோர் சித்த ராமே. 438

சித்தராமென்னூல்போ லாருஞ்சொல்வார் செகத்தி னிலே கோடானகோடி நூல்கள், பத்தியுடனானுரைத் தேன் மண்டலத்தில் பாகமுடன் யென்னூலைப் பார்த்த பேர்கள், முக்தியுடன் காண்பதற்கு வழியுங்காண்பார் மூவுலகும் கிட்டவல்லோகதியுங் காண்பார், சத்தியுடன் பராபரியைத் தொழுதுபோற்றிச் சட்டமுடன் சத்தகாண் டம் பாடினேனே. 439

பாடினேன் சத்தகாண்டமேழு காண்டம் பாங்கான யெழுநூறுவொன்று சொன்னேன், பாடினேனென்னூறு வைப்புசொன்னேன் பாங்கானதிரட்டு வெழுநூறு சொன் னேன் பாடினேன் முன்னூறு வொன்று சொன்னேன் பதிவானஞானமொரு நூறு சொன்னேன், பாடினேன் சோட்சமுமெட்டுஞ் சொன்னேன் பகரவே நிகண்டு பெரு நூலதாமே. 440

நூலானவாயிரத்திருநூறு சொன்னேனுணக்கமாஞ் சொச்சங்களனேகஞ் சொன்னேன், பாலானவைநூறு கறுகிடையுஞ்சொன்னேன் பாலகனே யென்னூல் போலா றுஞ் சொல்வார் சேலான கருக்கிடை யுங்குருக்கிடையுஞ் சொன்னேன் சிறப்பான சோதிடமுந்நூறு சொன்னேன் மூலானகாலாங்கி நாயர்தம்மை முடிவணங்கியடியேனு மொழிந்திட்டேனே. 441

பாஷாணப் பதங்கம்

மொழிந்திட்ட பாஷாணம் பலமொன்றாகுங் முனை யானரசமதுவும் வொன்றேயாகும் வழிந்திட்ட பூரமது பல மொன்றாகும் வாகானயிம்மூன்று மொன்றாய்ச் சேர்த்து, கழுந்திட்டுக்கல்வமதில் பொடித்துக்கொண்டு கருவான வறுவகை செயநீர்தன்னால், பிழிந்திட்டுத் தானரைத்துப் பில்லைதட்டிப் பிசகாமல் ரவிதனிலே காயப்போடே. 442

போட்டுமே சட்டியிலே பில்லைவைத்துப் பொங்க முடன் மேற்சட்டிக் கவிழ்த்துமூடி, நீட்டமுடன் சீலையது வலுவாய்ச்செய்து நேரான வடுப்பில் வைத்து யெரித்து

நேராய், வாட்டமுடன் மேற்பட்டி மேலேநிற்கும் யெழி லான பற்பமது சொல்லப்போமோ. 444

சொல்லவே பற்பமது தனையெடுத்து சுத்தமுள்ள செம்பதனில் பத்துக்கொன்று, வெல்லவே தானுருக்கி யெடுத்துப்பாரு வேதாந்ததாயினது வருளினாலே, புல் லவே செம்பதுவும் வெள்ளியாகி பூதலத்தில் மானிடர் கள் பிழைக்கவென்று, மெல்லவே போகரிஷி மனமுவந்து மேதினியில் பாடிவைத் தாருண்மையாமே. 445

சங்கால்பச்சைவேதை

உண்மையா மின்னமொரு கருமானங்கேள் வுரைக் கிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று, தண்மையா மய மதுவும் பலமொன்றாகும் தனியான பச்சையது பல மொன்றாகும், கண்கமயாம் ரசமதுவும் பல மொன்றாகும் காரமாம் வெண்காரம் பலமொன்றாகும், வெண்மையாம் வெடியுப்பு செயநீர்தன்னால் விருப்பமுடன் றனரைப்பாய் சாமம் நாலே. 446

நாலான செயநீராலாட்டி மைந்தா நாள்மூன்று ரவி தனிலே காயப்போடு, காலான செந்தூரஞ் சொல்லப் போமோ காசினியில் சித்தர்முனி செய்வாரப்பா, நாலான செந்தூரம் விருகனென்று மதிப்பான வெள்ளியது விராகனென்று, சூலானவெள்ளிக்குக் கீழ்மேலும் சூட் டியே மூசைதனில் பொங்கிடாயே. 447

பொங்கியவே மூசையிட்டுச் சீலைசெய்து புகழான வுலையிட்டு வூதித்தீரு, பதியவே வெள்ளியக்குச் சாய மேறி பழுப்பான பொன்போலே யிருக்கும்பாரு, முதி யவே நாலுக்கோர் தங்கஞ்சேர்த்து முயற்சியாய்ப் புடம் போடே மாற்றோமெத்த, கதியவே பசுகைநிறஞ் சொல் லப்போமோ கருத்துடனே பாடிவைத்தேன் கணக்காய்த் தானே. 448

செப்புத்தொட்டிவேதை

கணக்கான சிடிகையென்ற வேதைசொல்லேன் கணக்குடனே செப்புயென்ற தொட்டியொன்று, வணக்க முடன் மணவிரும்பு வொன்றேயாகும் வளமான வெண் காரம் வொன்றேயாகும், இணக்கமுடன் கூடடியொன் றாய்ப் பொடித்துக்கொண்டு யெழிலான தேன்விட்டு வரைத்துமைபோல், கணக்கமில்லா குகையிலிட்டு மூடிச் சீலை சுகமுடனேதான் செய்துவுருக்கிடாயே. 449

உருக்கியே யெடுத்துபா ரென்னசொல்வேன் வுத்த மனே வயஞ்சேர்ந்த தொட்டியாச்சு, நருக்கியேபின்னு

மொரு குகையிலிட்டு நலம்பெறவே மூசையிட்டுச் சீலே செய்து, பெருக்கியே தீமூட்டி யுலேயிலேத்தி பேரான துருத்திகொண்டுவூதித்திரு, பருக்கியே மூசைதனேயெடுத் துப்பாரு பாங்கான செம்பதுவும் வெளுத்துப்போமே.

வெளுப்பான செம்புதனே யெடுத்துப்பாரு விருப்ப முடன் வெள்ளிதனில் நாலுக்கொன்று, தனுப்பான தங் கமுடனென்று சேர்த்துத் தாட்டிகமாய்த் தானுருக்கி வாரடித்துச் சுளுப்பானவுப்புடனே காவிசேர்த்து சூட்ச முடன் புடம்போடவன்னிமீறும், பளுப்பான பொன்னது வுமிகவேயாகும் பணிதிமுதலனேத் தினுக்கும் பான்மை யாமே. 450

பான்மையாம்யாகநிலே தவத்தில்நின்று பாங்குபெற சின்மயத்தைப் பணிந்துபோற்றி, கான்மையாங் காலாங்கி தனேநினைத்து கருத்துடனே யெப்போதும் கடாட்சிக்கத் தான் மேன்மையுடன் மனேன்மணியை மனதிலெண்ணி மிக்கான சுடரொளியைக் காணவென்று, வான்மைபெற பராபரத்தை நிலேயாராய்ந்து வாகுடனேசுருதிநிலே நின்று போற்றே. 451

போற்றவே வஷ்டாங்கந் தன்னிற்சென்று புகழாக மேலவரை மனதிலுன்னி, ஆற்றவேவம்பரத்தை மேலே நோக்கி ஆராதாரச்சுடலே அருவித்தாண்டி, சீற்றவே லாகிரியி லனேத்துந் தள்ளிச் சிதாநந்த பாசமதையுள்ள டக்கி, நாற்றமென்னுந் துருத்திநிலேசமாதியாக்கி நடுவு நிலேபற்றியே தானமர்ந்து போற்றே. 452

வர்ணக்களிம்பு

அமர்ந்துமே லிங்கமென்ற தாரந்தானும் அப்பனே பூரமுடன் வீரந்தானும், சுமர்ந்துமே கெந்தியது துருசு தானும் சுடரான் பாஷாணமிருதார்சிங்கு, தமர்ந்துமே சூதமுடன் துத்தந்தானும் தாக்கான வெடியுப்பு சீனந் தானும், புமர்ந்துவே கெவுரியுடன் சாரந்தானும் பூட்டி ஞர் சமயெடையாய் பூட்டிஞரே. 453

பூட்டவே யறுவகை செயநீர் தன்ஞல் பொங்கமுடன் புடமாறியெடுத்துப்பாரு மற்றவெள்ளியது பழுக்கும் பாரே. 454

பாரப்பா வெள்ளியது பழுத்துமிக்கப் பாங்கான மாற்றதுவுமாறதாகும், சீரப்பா வெள்ளியிடையிரண்டுக் கொன்று சிறப்பாகத் தங்கமது வொன்று சேரு, நாரப்பா நயப்புடனே வேதிக்கும் பார் நயமான பசுமையது சொல் லப்போமோ, கூரப்பா சிடிகையிது வேதைமாற்கம் கூறி னேன் போகரிஷி உண்மைதானே. 455

லிங்கம் போக்கு

உண்மையாமின்னமொரு போக்குகேளு ஓகோகோவு லகுதனில்யார்தான் செய்வார், கண்மையாம் ரிஷிமுனிவர் சித்தர் செய்வார் காசினியில் நூல்பார்த்தோர் செய்வார் கள் தான், திண்மையாம் லிங்கமொரு பலமே வாங்கு தெளிவான வாப்பொடியும் தாளகந்தான், வண்மையா மிருதாருசிங்கிதானு மணக்கமுடன் துருசுமுடனே கார மாமே. 456

காரமாஞ்சாரமுடன் வீரந்தானும் கருவானபூநீறுஞ் சாம்பிராணி பூரமாம், குடனுடன் மதியும்போடு புகழான சீனமுடன் கரியுப்புப்பாகும், தீரமாமித்தனேயுஞ் சரிநே ரொக்க திகழவே குழிக்கல்லில் பொடித்துக்கொண்டு, சோரவே வறுவகை செயநீர் தன்ஞல் சூட்டியரையெண் சாமம் புகலக்கேளே. 457

கேளேநீ மெழுகாலே குகைதான் செய்து கெட்டி யாய் லிங்கமதையுள்ளே வைத்து, கோளே தான் வாரா மல் சீலேசுற்றிக் கொப்பனவே ரவிதனிலே காயவைத்து, கோளேதான் வச்சிரமாஞ் சீலேசெய்து தாக்குடனே குழி வெட்டிவுமிதான் கொட்டி, மீளேதான் கரிநெருப்பைக் கொட்டியேதான் மிக்கான தீமூட்டி மாட்டிடாயே. 458

மாட்டவே மூன்றுநாட் சென்றபின்பு மயங்கியே திரியாதேமைந்தாகேளு, வாட்டமுடன் தீயாறிதானிருக் கும் வளமான லிங்கமது யிருகிப்போகும், தாட்டிகமாய் நீயெடுத்துப் பார்க்கும்போது சாங்கமாய் லிங்கமது வுருக்குபோலாம், நாட்டமுடன் ருனெடுத்து மெழுகு செய்ய நலமான போக்குவழி சொல்லக்கேளே. 459

சொல்லவே வராகத்தின் நெய்யோடொக்க சுறுக் கான வெருக்கன்பால் சமனதாக வெல்லவே லிங்கமதை வோட்டிலிட்டு வேகமுடன் சுருக்கிடவ மெழுகுமாகும், புல்லவே மெழுகதனே வெள்ளிசெம்பில் புகழாகத்தான் கொடுக்க மெழுகுமாகும், மெல்லவே வாறடித்துப் புடத் தைப்போடு மேலான பொன்னதுவு மாகுந்தானே. 460

பொன்னுன மட்டமுடன் நாலுக்கொன்று பொலி வான தங்கமது வொன்று சேர்க்க, மன்னுன மன்னர் மெச் சும் பொன்னேயாச்சு மகத்தான வேதையிது சித்தர் வேதை, வன்னுனரிஷிமுனிவர் செய்யும் வேதை வாகு டனே மாணுக்கள் பிழைக்கவென்று, தென்னுனுங் களுக்குத் தெளிவாகத்தான் தேற்றமுடன் பாடிவைத் தேன் தெளிவைப்பாரே. 461

தெளிவான வாதவித்தை வதீதமெத்த தேசத்தில் கிட் டாது சிவயோகிக்கு, ஒளிவான சித்தரெல்லாம் மறைத்து

வைத்தார் ஓகோகோ நாதாக்கள் சூதார் கண்டார், நெளிவாக சாத்திரத்தின் மறைப்பு மாற்கம் நேர்மையுட னானுரைத்த பாவனைப்போல், வழியாகச் சொன்னவர்களாருமில்லை வையகத்தில் போகரைப் போலாவார்தானே. 462

தானான பிரமவித்தை யறியவேண்டும் சதாகாலஞ் சமாதியிலே நிற்கவேண்டும், கோனான குருவருளை காணவேண்டும் கானாட்டால் காயுமில்லை பூவுமில்லை, வேனான பாஞ்சுடரை நிர்த்தம் நிர்த்தம் விரும்பியே பேரின்பங் காணவேண்டும், பானானகாயசித்தி யோகசித்தி பாங்கான குளிகையுளசித்துதானே. 463

காணவே வண்டபகிரண்டமெல்லாம் கடிதான வடிமூலங் காணவேண்டும், பூணவே பூரணத்தையறியவேண்டும் போக்கான வஸ்துவெல்லாங் காணவேண்டும், தோணவே கழுத்திலே நிற்கவேண்டும் சூட்சமுடனாடெல்லாமறியவேண்டும், வேணவே வம்பரத்தை நாடவேண்டும் வெட்டவெளிசின்மயத்தைக் கூடநன்றே. 464

கூடவே மனந்தேறி நிற்கவேண்டும் குவலயத்தில் துரியம் விட்டுப் பிரியவேண்டும், நாடவே நடுமையமேறல்வேண்டும் நாதாக்கள் கூத்தெல்லாங் காணவேண்டும், தேடவே வாலைதனைக் காணவேண்டும் தெளியாத மூன்றெழுத்தைப் பற்றவேண்டும், நீடவேசிதானந்த வறிவில் நின்று நிட்களமாய் மேலவரை போகநன்றே. 465

நன்றான வர்ச்சனைகள் யாவுந்தேர்ந்து நாதாக்கள் பூசிக்கும் நிலையைப் பார்த்து, குன்றான பிராணயந் தன்னிற்சென்று கொடிதான காமத்தை நிவர்த்தி செய்து, பன்றான பரபூசை சிவபூசையாவும் பாங்கான ஞானத்தின் சுடலைத்தாண்டி, வன்றான மாயசமுசாகரத்தை மறந்தவனே சித்தரினிலொருவனாமே. 466

பாஷாணமெழுகு

ஆமப்பாவின்னமொரு கருமானங்கேள் அப்பனே சங்கு யென்ற பாஷாணந்தான் தாமப்பாதிருகுகள்ளிப்பாலை வாங்கித் தப்பாமற்றான் சுருக்கு சாமம்நாலு, வேமப்பா கொடுத்தவுடன் கட்டிப்போகும் வேகமுடன் கடுஞ்சுருக்கு சொல்லப்போமோ, நாமப்பா மெழுகுவகை போக்குச் சொல்வோம் நாதாக்கள் மறைப்பையெல்லாம் நவில்வேன்பாரே. 467

நவிலவேயானை யென்னுவிலாங்குதன்னை நாட்டமுடன் காரமிட்டுத்தயிலமாக்கி, குவிலவே சிற்றண்டமஞ்சள் தானும்கூடவே தான்கூட்டி கலந்து கொண்டு, கவிலவேசங்கென்ற பாஷாணத்தைக் கருவாக ஓட்டிட்டு சுருக்கு தாக்கு, புல்லமே மெழுகாகும் பாஷாணந்தான் காட்டினாற்லோகத்து மாந்தர்க்காமே. 468

ஆமேதான் மெழுகெடுத்து ரவியில்தாக்கு அப்பனே பத்துக்கு ஒன்றுபோடு, தாமேதான் ரவிதானும் வெளுத்துக்காணும் தரித்தவே யெடைக்கிடைதான் வெள்ளி சேர்த்து, நாமேதான் சொன்னபடி வங்கஞ்சாரநயமாக வெள்ளியது வலுத்துப்போச்சு, போமேதான் திராவகத்துக்குயிருமாச்சு போக்கான செம்பதுவும்கட்டிப்போச்சே.

போச்சென்று விடுகாதே மைந்தாகேளு பொங்கமுடன் மெழுகெடுத்து வெள்ளியத்தில், பாச்சவே பத்துக்கு ஒன்று தாக்கு பதமுடனே நீரதுவும் நீங்கிப்போகும் மூச்சொன்று விடுகாதே யின்னங்கேளு முக்கியமாய் மேற்சொன்ன வெள்ளியத்தை, காச்சுடனே வறுவகை செயநீர் தன்னில் களிப்புடனே மூன்றுமுறைவுருக்கிச்சாயே.

சாய்க்கவே வெள்வங்கம் வெள்ளியாகும் சாங்கமுடன் பத்துக்குரண்டு வெள்ளி, மாய்க்கவே தானுருக்குமகத்தாம் வேதை மானிலத்தில் சொல்லுவரோசித்தர்தாமும், காய்க்கவே பொன்வேண்டு மென்றாயானால் கருவாக வென்னுடைய நூலைப்பாரு, ஏய்க்குமே பின்னொருவர் நூலானாலுமென்போலும் யாருரைப்பார் சித்தர்தாமே.

சித்தர்பழிப்பு

சித்தானசித்தர் முனியார்தான் சொல்வார் சிறந்த சிவயோகியருஞ் சொல்லமாட்டார், முத்தான சாத்திரங்களனேகமுண்டு முன்பின்னாய்பாடிவிட்டார் சித்தர்தாமும் பாடிதான் வழிதுரையுங்காணார் மாண்பர் பாழாகி கட்டலைந்து கெட்டலைந்து, தெத்தானபித்தமது வதிகமாகித் தெரு தெருவாய் திரிவார்கள் மடையர்தாமே. 472

மடையரு மானவர்கள் நூலைப்பாரார் மாறுட்டமாகவே கெடுத்தாரென்று, நடையான நூல்வழிக ளறியாமற்றான் நாதாக்கள் கைமறைப்பு யார்தான் காண்பார், மடைபோல பேசவல்லார் நூலைப்பாரார் மதிகுலைந்து நினைவறிந்து வறிவுகெட்டு, கடையான சாத்திரங்கள் மிகவும் பார்த்துகருத்தெரியா மானிடர்கள் மெத்தவாமே.

மெத்தவுண்டு முழுமடைய ரென்ன சொல்வார் முனையான சாத்திரங்கள் மிகப்பாராமல், சுத்தமுடன் ரிஷிமுனிவர் சொன்ன நூலை சூட்சாதி சூட்சங்காணமற்றான், பத்தரென்ன சித்தர்களை! மெத்தப்பேசி பலபலவாய் சாத்திரத்தை மறைப்பு செய்வார், குத்தமென்று திட்டியல்லோ சாபந்தன்னைக் குவலயத்தல் தேடிக்கொள்ளு மாண்பராமே. 474

போகர்வெழியாங்கம்

வெளியான சாத்திரங்களனைத்துங் கண்டேன் வேதாந்தத் தாயினது வருளினாலே, ஒளியான காலாங்கி கடாட்சந்தன்னால் ஒளித்திருந்த சாத்திரங்கள் கை மறப் பைதெளிவாக மானிடர்கள் பிழைக்கவென்று தேசதேசங் கள் முதல்குளிகைபூண்டு, நெளிவானமலை குகைகள் வனாந்தரங்கள் நேர்ப்புடனே குளிகையிட்டு பறந்தேன் தானே. 475

தானான சித்தர் முனியிருப்பிடங்கள் தாக்கான சமாதி முதலெல்லாம் பார்த்து கோனான கவவரவர்கள் செய்த நூலை குகைதனிலே மறைத்து வைத்தகருவையெல்லாம், பானாகசித்தரிடம் வாதுபேசி பழிபோட்டு சாத்திரங்கள னைத்தும் பெற்றேன், மானாக மறைத்து வைத்தநுட்ப மெல்லா மதிப்புடனே யாராய்ந்து நூல்செய்தேனே.

செய்தேனேபெரு நூலேழாயிரந்தான் செப்பினேன் போகரிஷி சத்தகாண்டம், செய்தேனே நாதாக்களுள வைப்பார்த்து திரட்டினேன் குருநூலாய்க் காவியந்தான், செய்தேனே நூலினிடைவண்மை பார்த்து சீறியே சித்த ரெல்லாஞ் சினந்தாரென்னை செய்தேனேலோக மெல்லாஞ் சித்தாச்சென்று சித்தரெல்லாமெனைச்சபிக்கவந்திட்டாரே.

வந்திட்டார் கோடானகோடி பேர்கள் வரைகோடி துரைகோடி தொந்தங்கோடி, நொந்திட்டு சித்தர்களை செய்தேனென்று நொடிக்குள்ளே யெனைக்கொல்ல வந்தா ரையா, முந்திட்டுயான் பயந்துகாலாங்கி தன்னை முறைய மிடரெனதையர் கிருபையாலே, தந்திட்ட சாபமதை நிவர்த்திசெய்து தாரணியில் பிழையென்று யெனைவிட் டாரே. 478

போகர்கமலமுனியைக் கண்டது

விட்டவுடன் யானுமல்லோ சீனதேசம் விடுப்பட்டு போயிருந்து கமலர்தன்னைச், சட்டமுடன் சமாதியிலே யிருந்தாரங்கே சார்புடனேயவர் பாதம்தொழுதிட்டே தான் இட்டமுடன் யானுமல்லோ சீனதேசம் யின்பமுடன் காணவென்று குளிகைபூண்டு, சட்டமுடன் யான்வந்தே னென்றுசொல்லி கமலமுனி தன்பாதந் தொழுதிட்டேனே.

தொழுதிட்டயெந்தனுக்கு முனிதான் சொன்னார் தொல்லுலகில் நீர்கற்றவித்தை தன்னை, பழுத்திட்டமில் லாமல் சீனந்தன்னில் பட்சமுடன் மாணாக்கள் பிழைக்க வென்று, முழுதிட்டந்தன்னுடனே முனிதான் சொல்ல முயற்சியுடன் கற்றவித்தைப் பழுதில்லாமல், வழுதிட் டமுடன்றானு மறைப்பையெல்லா மானிலத்தில் கொட்டி விட்டேன் வண்மைபாரே. 480

வெள்வங்கவெட்டை

வண்மையா மின்னமொரு மாற்கங்கேளு வளமான வங்கமொரு பலமே தூக்கு, திண்மையாந் தாளகமும் பாஷாணந்தான் திறமான சவுக்காரஞ் சாரந்தானும் உண் மையாம் பூநீறு கிளிஞ்சிற் சுண்ணம் வுத்தமனே வகைக்கு வொரு பலமுமது தூக்கு, நன்மையாங்கல்வத்திலாட்டியே தான் நலம்பெறவே கலசமென்ற குடுவைவாங்கே. 481

வாங்கியே முன்னரைத்த சரக்கையெல்லா மார்க்க முடன் கலசத்திலுள்ளே போட்டு, தேங்கியே திரியாதே மைந்தா கேளு தெளிவான வங்கமதை சரக்கில்போட்டு ஓங்கியே சில்லிட்டுச் சீலைசெய்து வுத்தம கோழியென்ற புடத்தைப்போடு, தூங்கியே திரியாதே மைந்தாபாரு துடியான களங்கு போலிருக்கும்பாரே. 482

களங்கான வங்கமது வொன்றேயாகும் கடிதான வெள்ளியது வொன்றேயாகும் குளங்கான சூதமது ரண்டேயாகும் கொடிதான சாரமது காலேயாகும் பளங் கான மதிசேயநீர் தன்னாலாட்டி பாங்கு பெரவில்லையது லேசாய்த் தட்டி, முளங்கான ரவிதனிலேகாயப்போடு முத்தமனேவோட்டி லிட்டுச் சீலைசெய்யே. 483

செய்யவே காடையென்ற புடத்தைப்போடு சேரவே வோடது தான்குளிர்ந்தபின்பு, வையவே தானெடுத்தும் பார்க்கும்போது பாங்கான பற்பமது சொல்லப்போமோ, வெய்யவே ரவிதனிலே பத்துக்கொன்று விதமுடன் றானுருக்கிக் கொடுக்கும்போது, துய்யவே துய்யானுக்கி கொப்பதாகும் துரைராசர் மெச்சுகின்ற மதியுமாமே. 484

மதியானவெள்ளி தனில் பத்துக்கொன்று மாற்க முடன்றான்சேர்த்து வங்கத்தூது, நிதியான வெள்ளியது துய்யரூபாய் நிகரில்லைமாற்றில்லை கணக்குமில்லை, பதி யான பதிதனிலே நின்றுகொண்டு பட்சமுடன் திரிபுரை யைப்பணிந்து போற்றி, துதியான வாலைதனை வணங்கி நித்தம் சூட்சமுடனிறங்கு நிலைகண்டிடாயே. 485

கண்டபின்பு புசமாதிக்கு நிலையைப்பாரு காலாங்கி வையர் தம்மைக்கருத்திலுன்னி, அண்டரண்டம் தான் புகழு மெந்தனையரருளிந்தால் கதிபெறலாமன்பர்கேளு, தொண்டு செய்து சித்தர்களை வணங்கி நித்தம்தொடர்ந்து மேயவரிடத்தில் பத்திவைத்தால், விண்டுபுகழ் மாலயனார் கிருபையாலே விட்டகுறைவுந்தனுக்கு வாய்க்குந்தானே.

துருசுபற்பம்

வாய்க்கவே வின்னமொரு கருமானங் கேள்வளமான துருசுவொருசட்டி வாங்கி காய்க்கவே பொன்வேண்டு

பார்க்கவேநாதாக்கள் கைமைறப்புகருவாளிகண்டறி
வான்மாற்றோர்காணுர், ஏர்க்கவேயவர்களிடம் தொண்டு
செய்து என் மகனேயனவர்கள் மனங்கனியவேண்டும்,
பூர்க்கவே மனதுவந்துவுந்த னுக்குப் புகழ்ச்சியுடன்
வேதைமுகம் யாவுஞ் சொல்வார், தீர்க்கவே சாத்திரங்கள்
முறைப்பார் தீர்க்கமுடனறிபவனே சித்தனுமே. 500

சாரக்கட்டு

சித்தனுமின்ன மொருமார்க்கங்கேளு, சிவப்பான
சாரமது கட்டுசொல்வேன், நித்தமுடன் காரமது
வொன்றேயாகும் நிகரான சீனமது வொன்றேயாகும்,
துத்தமுடன் பூநீறுவொன்றேயாகும் துடியான சிப்பி
யென்ற தண்ணப்தானும், முத்தமுடன் சிப்பியுட செய
நீர் தன்னுல் மூன்றுநாளரைத்து பாவகமே செய்யே. 501

செய்யவே மெழுக்காலே குகையுண்டாக்கி செழிப்
புடனே சாரமதுக் கங்கிபூட்டி, நையவே சுண்ணும்பு
சீலைசெய்து நலம்பெறவே ரவிதனிலே காயவைத்து,
முய்யவே முழப்புடந்தான் முனையான மணல்தனிலே
நடுவேவைத்து, பையவே மணலாலே மேலேமூடி பாங்கு
பெறதீமுட்டி போட்டிடாயே. 502

போடவே தீயாறி யெடுத்துப்பாரு பொங்கமுடன்
சாரமது கட்டிப்போடும், நீடவே முப்புடமிப்படியேதீறு
நிலையான சாரமது தந்தம்போலாம், நீடவே சாரணைதான்
சொல்லக்கேளாய் கொடிதான நாயுருவி சாம்பல்தன்னில்,
மூடவே சாரமதைவுள்ளே வைத்து முழுகவே சாம்பலை
யும் மேலேபோடே. 503

போடவே சட்டிதனில் பொதிந்துமூடி பொங்காமல்
சீலையது துவலுவாய்ச்செய்து, சூடவே தணல் மூட்டி
மூன்று நாளாய் சுகப்பெறவே தானெரிப்பாய் மைந்தா
கேளு, தூடவேயாரின பின்னெடுத்துபாரு துடியான
சாரமதுக்கிணையே வேறுண்டோ, ஆடவேசாரமதை
யென்னசொல்வேன் அப்பனே கருவாளி செய்வான்பாரே.

பாரேதான்சாரமது கட்டுமானுல் படுமுன்னே சரக்
கெல்லாங் கட்டிப்போடும், நேரேதான் நாகமதை நொடி
யிற் கொல்லும் நேரான செம்பதுவு மூறல்போகும், சீரே
தான் சாரமது கட்டுமானுல் சிறப்பான வீடுகளுங்கட்டி
னுற்போல், கூரேதான் சரக்குதான் காலனுகும்கொடிதரன
சாரத்தின் நேர்மைபாரே. 505

நேர்மையாஞ் சாரமது கட்டிற்றுனுல் நெடுந்தூரம்
வேதைமுகம் காணலாகும், கூர்மையாம் சூதத்தைக்
கொல்லுங்காலன் கொடிதான சுன்னமதை செப்பவென்
றுல், வார்மையாம் வுப்புக்குச் சத்துருமேயாகும் வாகான

செந்தூரகோடிவேதை, மேர்மையாஞ் சித்தர்முனி செய்
வாரப்பா மேதினியில் மற்றவரால் செய்யப்போமோ. 506

போகுமே சாரமென்ற செந்தூரத்தை பொல்லாத
வயிற்றுவலி குன்மத்தோங்கும், ஏருமேலாயுவென்ற
தெண்பதுக்கு மெழிலான சோகை காமலையேற்கும்,
பாகுமே சூதகத்தில் வாய்வுள்ளோர்க்கும் பாங்கான
மகோதரமாம் பீலியோர்க்கும், வாகுடனே தேனதிலே
கொடுத்தாயானுல் வளமான தேகமது கர்ப்பமாமே. 507

காந்தகர்பம்

கற்பமா மின்னமொரு சருமானங்கேள் காசினியோர்
பிழைக்கவென்று லகுவாய்ச் சொல்வோம், அற்பமென்று
நினையாதே வன்பாகேளு அருங்காந்த மூசியென்தேழதா
கும், துற்பரவாய் பலமதுதான் கொண்டுவந்து துடியான
அறுவகைசெயநீர் தன்னுல், சிற்பரம் போல் மெழுகாக்கி
மூசையிட்டு சில்லிட்டுச் சீலையதுவலுவாய்ச் செய்யே. 508

வலுவாகச் செய்துமல்லோ ரவியில்வைத்து வாகு
டனே தீமூட்டிப் புடத்தைப்போடு, சுலுவான புடமது
தான் போட்டாயானுல் சுறுக்கென்ற காந்தமதுயீயமா
கும், பளுவானயீயமது சொல்லப்போமோ பதங்தெருந்து
யெடுத்தவனே வாதியாவான், மெழுகான காந்தமது யீய
மானுல் மேதினியில் வெகுகோடி வேதையாமே, 509

வேதையாங் காந்தமென்ற யீயந்தானும் விரைவான
கெந்தியிட சத்துதானும், பாதையாம் நாகமென்ற சத்து
தானும் பாங்கான வயத்தினிடசத்துதானும், மேதையாம்
பூநாகச்சத்துதானு மிக்கான வப்பிரேக சத்துதானும்,
தோகையுடன்றுனெடுத்து வொன்றுய்க்கூட்டி தொந்த
முடன் றுனெடையாய்த் தங்கஞ்சேரே. 510

தங்கமுடனிடையாக வொன்றுய்க்கூட்டித் தாழ்மை
யுடன்றுனரைப்பாய் கையான்சாற்றுல், துங்கமுடன்
நாற்சாமரைத்துப்பில்லை துப்புறவாய் பில்லைதட்டி காய
வைத்து, பக்கங்கள் வாருமல் ஓட்டிலிட்டுப் பாங்குபெற
சீலையது வாலுவாய்ச்செய்து, அங்கமுடன் கோழியென்ற
புடத்தைப்போடு அப்பனே செந்தூர மாகுந்தானே. 511

தாணுகயிப்படியே பத்துபுடம்போடு தாக்கான
மூலிகையாலரைத்துப் போடு, வேணுக செந்தூரம் வீர
மெத்த வேதைக்கு வெகுதூர மெட்டியோடும், பானுக
செந்தூரம் பதனம்பண்ணு பத்துக்குவொன்று குரு
வெள்ளிசெம்பில், மானுகேள் கொடுத்திடவே வேதிக்கும்
பார் மகத்தான மருந்தினிட போகுத்தானே. 512

போக்கான செந்தூரங்குன்றியுண்ணு பொங்கமுடன்
மண்டலந்தான் கொண்டாயானுல், தூக்கான தேகமது

கற்றூணுகும் துலையாது வயதுமிக வதிதங்காணும், நோக்கான நரைதிரையு மற்றுப்போகும் நோம்தாணுஞ் சடந்தனிலே மேவலாகா, பாங்கான கண்ணுரண்டு மொளியே வீசும் பார்வைக்கு வருந்துதியுங் காணலாமே.

காணலாம் நட்சத்திரம் பகற்காலத்தில் கருவிழியு மொருக்காலும் திரைதானில்லை, பூணலாம் தேகத்தை வுறுதிபண்ணு போக்கான சட்டையது தள்ளிப்பாரு, வேணலாம் வெகுகால மிருக்கலாகும் வேண்டியே தவ நிலைக்கு சமாதிதேட, நீணலாம் வாசியது மேல்நோக்காது நீணிலத்தில் நீயுமொரு சித்தனுமே. 514

போகர்கெடை கட்டிவித்தை

சித்தனும் கெடையாட்டஞ் சொல்வேன் கேளு செழிப்பான துலாக்கோலாமுங்கலொன்று, முத்தலாம் நூறடியாம் பருவ நீட்டமுனையான கொய்புக்குகயிர்தான் நாலு, சுத்தமாம் வெட்டார வெளியில் நின்று சுகமுடனே கால் நாட்டி பதுங்குமாட்டி, துத்தமுடன் முனைகிடையில் காந் தம்வைத்து துறையான விரும்பினிடசட்டைபூணே. 515

பூணவே கைதனிலே மாத்திரைக் கோலும் புகழான நெற்றிதனிலங் கோலமையும், நாணவே மானிடர்கள் நடுங்கவென்று நாதாக்கள் மெச்சிடவே கச்சைபூண்டு, காணவே தலைதனில் கலசப்பானை கடினமுடன் பத்தொன்று வொன்றுடொன்று, ஊணவே பானைதனில் காந்தம்பூசி வுத்தமனே கிடைதனிலே யேறலாமே. 516

ஏறலாமுச்சி வரைக்கிடமேல் நின்று ஏற்றமுடன் துத்தாரிவாயிலேந்தி, கூறலாமோடியென்ற வித்தைதன்னை குவலயத்தில் மெச்சிடவே போர்கதாமும், தேறவேமேல் நின்று காரணந்தன்னில் திறமுடனே வாசியைத்தான் கீழ்நோக்காமல், மாரவே பிரணவத்தை மாறி மாற்கமுடன் நின்று விளையாடினரே. 517

ஆடினர் சீனமென்ற தேசந்தன்னில் அன்புடனே மாணுக்கள் பிழைக்கவென்று, பாடினர் சித்தர்முனி சொன்ன நூலைப் பரிவாகத் தானெடுத்துப்பாருளோராக்கு, மூடினதோர்வுளவெல்லா மிகவே பார்த்து முயற்சியுடன் வெளியரங்கமாகச் செய்தேன், கூடினதோர் கருமானமெல்லாந்தேர்ந்து குறிகண்டு நிலைகண்டார்சீனத்தாரே.

சீனபதி மானிடர்கள் செய்யுமார்கம் சித்தர் முனிரிஷி தேவர் முறைகளாகும், மானபதிமாண்பர்கருவாளியல்லோ மண்டலத்திலாருமில்லை பேருமில்லை, தானமுடன் கொச்சியென்ற மாற்கத்தாரும் சட்டமுடன் செய்வார்களிவர்போலா, மோவானமுடன் தேவதாரிஷிக் கொப்பாவார் மண்டலத்தில் சீனபதி மாந்தர்தாமே. 519

தாமேதான் சத்தியங்களுண்டு தரணிதனில் பொய்சொல்லார் மாண்பர்தாமும், வேதமேதான் நீதிமனுமுறைகளுண்டு வெகுகோடி வித்தைகளுஞ் செய்வாரப்பா, போமேதான் பொய் யொன்றுஞ் சொல்லமாட்டார் பொன்னுலகுக் கொப்பான மாந்தரப்பா, நாமேதான் கண்டபடி சொன்னேனப்பா நாட்டினிலே சீனத்துக் கிணையாகாரே.

ஆகாது காலாங்கிநாதர்தாமும் அவருடைய சீர்பாத கிருபையாலே, போகாதே தேசமெல்லாங் குளிகை பூண்டு போனேனே சேரசோழ பாண்டிநாடு, சாகாதசித்தர் முனியென்று சொல்லி சமாதியிலேயிருப்பே னென்றமர்ந்தார் தம்மை, வேகாத வெயில்தனிலே தவசிருந்த வேணசித்துப் பொய்ஞ்ஞானி கண்குட்டேனே. 521

கண்டிட்டேனவர்களிடம்வாது பேசிக் கருவான மறைப்புமுதல் திறப்புங்கேட்டேன், விண்டிட்ட சாத்திரங்கள் கற்றேரர்போல வீண்வார்த்தை பேசியல்லோ பொய்யைச் சொல்வார், துண்டிட்டுரவர்களிடம் துஞ்சிப் பேசி தூரான மாராட்டப் பேச்சரிந்து, பண்டிட்டசீனபதி வந்து சேர்ந்து பலபலவாம் வித்தைகளைக் கற்பித்தேனே.

கற்பித்தவித்தைகளும் கணக்கேயில்லை கால்மாடு தலைமாடு பிரட்டார்மாண்பர், துற்புத்திசற்றேனுமில்லா பாலர் துறைமுகமும் ஒரு முகங்கண்டதில்லை, விற்புத்தியான தொரு மாண்பரப்பா விண்ணுலகில் சீனபதிக்கிளையாமோதான், சற்புத்தியுடையதொரு சித்தர்க்கொப்பாய் சாற்றலாஞ்சீனபதி தேசத்தாரே. 523

தேசமென்றல் தேசமது சீனமாமோ செகத்திலே கண்டவர்கள் யாருமில்லை, பாசமென்றல் பிரமத்தின் பாசமாகும் பாருலகில் சதாகித்தம் தொழுவார் மாந்தர், நேசமென்றல் போகரிஷி தன்னைபோற்றி நெடுங்காலஞ் சமாதியிலே யிருந்தார்கோடி, வாசமுடன் சீனபதியாவுங் கண்டேன் வளமாக மாந்தருட வுண்மைபாரே. 524

நாகவெள்ளி

வண்மையா மின்னொரு கருமானங் கேள்வுத்தமனே மாணுக்கள் பிழைக்கவென்று, தண்மையாம் நாகமது சேர்தானென்று தாக்கான பாஷாணம் சேர்தானென்று, கண்மையாஞ் சுண்ணும்புஞ் சேர்தான் பாதி கருவான மதியுப்பு சேர்தான் காலாம், நன்மையாமித்தனையுமொன்றய்ச் சேர்த்து நலம்பெறவே சிப்பியென்ற சாரத்தாட்டே. 255

சாரமென்ற செயநீரி லறைத்துமைந்தா சாங்கமுடன் நாகத்துக் கங்கிபூட்டி, காரமென்ற சுண்ணும்பு சீலை செய்து கருத்துடனே ரவிதனிலேகாயவைத்து, ஈரமென்ற

சீலையது காய்ந்த பின்பு யென்மகனே கோழியென்ற
புடத்தைப்போடு, பாரமென்ற கண்ணதுவும் நீங்கியே
தான் பளபளத்தவெள்ளியது வாகுந்தானே. 525

தானான வெள்ளியது சிவத்துக் கொப்பாம் சங்கர
னார்பூசைக்கு யுகந்த வெள்ளி, கோனான வெள்ளிதனை
கடையில்மாற்றி கொப்பனவே பூசையர்ச்சனைகள் செய்
வாய், பானான பரங்களுக்கு வன்னமீவாய் பட்சமுடன்
கோயில் குளம்கட்டவேண்டும், வேனானவந்தணராம
குருக்கள்மாற்கு வேணவுபசாரமது செய்யநன்றே. 527

செய்யவே திரிவாமி பூசைவேண்டும் சிறப்பான
மனோன்மணியை நணுகவேண்டும், பையவே சத்தியுட
பூசைவேண்டும் பாருலகில் தேவதைகள் வணக்கம்வேண்
டும், முய்யவே சிதானந்தம போற்றி செய்து மோட்சத்
திற்கேகும் வழிதேடவேண்டும், மையவே காலாங்கிதனை
நினைந்து மண்டலத்தில் வாழ்பவனே யோகவானே. 528

போகர் சொர்ன வயிரவ பூசை

யோகமென்றால் யோகமது சொல்லப்போமோ யொளி
வான வயிரவன்றன் பூசைசொல்வேன், போகனென்னும்
வடியேனுந்தாள் வணங்கி பொங்கமுடன் காலாங்கி
நாதர் பாதம், வேகமுடன்றாள் பணிந்து வணங்கி நின்று
வேதாந்தத்தாயினது வருளும்பெற்று, சாலமுடன் நவ
கோணவாதலிட்டு சாந்தமுடன் கலசமதுவைத்திடாயே

வைத்திடவே கலசமது நூலேசுற்றி யாருடனே தேங்
காயைமேலேவைத்து, கைத்திடவே மாயிலையைக் கவசம்
பூண்டு கலசத்தின் கீழுநவதானியங்கள், மெய்த்திடவே
தான் பரப்பிகலசம் வைத்து மேன்மையுடன் கலசமது
யெதிர்நேராக, பைய்த்திடவே மஞ்சளென்ற பிள்ளையா
ரைப் பக்குவாய் எதிர்வாசல் வைக்கநன்றே 530

நன்றானரீங்காரமோங்காரத்தை நலமுடனே வஷ்ட
திசைவாசல்போடு, குன்றான வயிரவனை முன்னேவைத்து
கூறுவாய்யங்சிங் வங்கென்றபோது, பன்றான சதுர்வா
சல் தூபதீபம் பாருடனே பாணக்கம் பகுந்தவன்னம்,
வன்றான வுருதானும் லட்சமோது வயிரவனார் பூசையது
வகுத்தவாறே. 531

வாரனவாதமது முடிந்தாறானால் வளமுடனே வயிர
வன் பூசை வேண்டும், சீறான தங்கமது பலிக்கும்பாரு
செகத்திலே சித்தர்களுஞ் செய்வாரப்பா, கூறான புத்தி
யுடன் குருபதத்தைக் கொப்பனவே தான் வணங்கிநிற்க
வேண்டும், காறான காலங்கி நாதர்பாதம் கடாட்சித்து
தொழுகவென்று பாடினேனே. 532

முத்துவித்தை

பாடினேன்முத்துயென்ற வைப்புசொல்வேன் பாங்கு
பெறமாணுக்கள் பிழைக்கவென்று, தேடியே முத்தினிட
சிப்பி வோட்டை தெளிவான வெண்மைநிறம் போன்ற
தாக, கூடியேவொரு சேருதானெடுத்துக் குடிலமுடன்
றானிடித்துப் பிழிந்துகொண்டு, ஆடியே நவநீதம்
வெண்ணைபோல அப்பனே தானெடுத்து வளமை
செய்யே. 533

வளமையென்ன சொல்லலென்றால் வயணங்கேளு
வாகான நீதமுடன் குடோரிகாரம், பளமையாம் கட்டின
தோர் காரந்தானும் படிகமா மசீனமென்ற பதியினுப்பு,
மளமையாமிது வெல்லாஞ் சரியாய்க் கூட்டி மார்க்க
முடன் மூசையிட்டுச் சீலைசெய்து, தளமையாயுலையிலிட்டு
வுருக்கிப்பாரு தளுக்கான முத்துபோல் வெளுக்கும்பாரே.

வெளுப்பான முத்துதனை யுடைத்துப்பாரு வெருளா
மல் சிறுமணியாங் கருவுகட்டி, பளுக்கான மூசையிட்டு
வுருக்கித்தீரு பாலகனே கருக்களிலே துவாரமிட்டு, களுக்
கான கருக்களிலே வார்ப்பாயானால் சூட்சமுடன் முத்த
துரும்பாய்ந்து நிற்கும், தளுக்கான முத்ததனை யெடுத்துக்
கொண்டு தண்மைபெற ராஜரிடம் சென்றுபாரே. 535

சென்று மேயவர்களிடஞ் சிறக்கவே தான் சீதான
முத்தனைக் கணிதமிட்டு, குன்றுபோல் திரவியங்கள்
மிகவும் பெற்று கோடானகோடி மரியாதை பூண்டு,
நின்றுமே யவர்களிடம் விடைகள் பெற்று நீணிலத்தில்
நீயும் மொருவரசனாவாய், நன்றுமேகாலாங்கி நாதர்பாதம்
நலமுடனே யான் வணங்கி பாடினேனே. 536

போகர்கெம்புவுருக்கு

பாடியே தளமென்ன கெம்புராசி பழுதுள்ள காய்ச்
சுக்கல் தன்னி லொப்பாய், ஆடியே சேறொன்று வாங்கி
மைந்தா அழகான குருந்தக்கல் நாலிலொன்று, தேடியே
கட்டினதோர் காரமொன்று தெளிவான பூநீறிநாலி
லொன்று, கூடியேவறு வகைசெயநீர்தன்னால் குண
முடனே தானரைப் பாய்சாமம் நாலே. 537

நலமான சாம மதுவரைத்து மைந்தா நலமுடனே
மூசையிட்டு சீலை செய்து, காலானரவிதனிலே காயவைத்
துக் களிப்புடனே வுலையிலிட்டு வூதித்தீரு, சேலான சரக்
கதுவு மொன்றாய்ச் சேர்ந்து செழிப்புடனே தானுருகி
சிவப்புமெத்த, பாலான முகம்விட்டு கணவிட்டாடும்
பாலகனே கருக்கட்டி வார்த்திடாயே. 538

வார்க்கவென்றால் சிறுகருவாம் பொடியாய் செய்து
வளமாகத் தானெடுத்து வார்ப்பாயானால், தீர்க்கமுடன்

மணிபோல யிறுகிக்கட்டும் திறமான கெம்பினிடவலுவுகாணும், பார்க்கவே வேண்டுமென்று லதீதமெத்தப் பாரினிலே சித்தர் செய்யு மவேதை மார்க்கம் சேர்க்கவே படிகமென்ற சானை தன்னில் சிறப்புடனே தான் கொடுக்கவொளிதானுமே. 539

ஒளிவான கெம்பினுட மகிமைமெத்த ஓகோகோவுலகு தன்னில் செய்வாருண்டோ, தெளிவான கெம்பெடுத்து ராஜர்மார்க்கம் சென்று வெகுமதிப்புடனே லாபங்காண்பீர், தெளிவான வித்தையிது பாருஞ் சொல்லார் நீணிலத்தில் மாணுக்கள் பிழைக்கவென்று, கனிவுடனே காலாங்கி தன்னைப் போற்றி கருவாகப் பாடிவிட்டேன் போகர்தானே. 540

போகர்பச்சைக் கர்ப்பூரவைப்பு

தானான சூடனது பலமே வொன்று தாககானதீனமது பலமோ கால்தான், வேனான சாம்பிராணி பலமோ கால்தான் மூக்கான மதியுப்பு பலமோ கால்தான், பானான பூநீறு பலமோ கால்தான் பாங்கான தாழையுப்பு பலமோ கால்தான், கோனான கோரையிட கிழங்குதானும் குணமான வாடையென்ற காறமாமே. 541

காரமாங் கஸ்தூரி மஞ்சள் தானும் கருவான ஏலக்காய் தன்னோடொக்க, வீரமாமிலாக்காயின் சந்தனந்தான் விரைவான கிளியூறல் பட்டைதானும், கோரமாம் பச்சிலைக் கிச்சிலிதான் கூட்டி கோமகனே கவனமுடன் விருகன்சேரு, தீரமாமாவினிட நெய்யில்தானும் தீர்க்கமுடன் றானரைப் பாய்சாமமட்டே. 542

எட்டான சாமமது வரைத்தபோது யெழிலான மெழுகதுபோலாகும்பாரு, வட்டான பீங்கானுக்குள்ளே போட்டு வளமுடனே மேற்பீங்கான் புனுகுபூசி, திட்டான சட்டிதனில் மணல்தான் கொட்டி திறமுடனே பீங்காணும் நடுவே வைத்து, மட்டான மணல்தனை மேலே கொட்டி மார்கமுடன் றானெறிப்பாய் சாமம்வொன்றே.

ஒன்றான சாமமது யெரித்தபோது வுத்தமனே மேற்பதங்க நின்றுமேதான், குன்றான பீங்கான்மேல் தேங்காய்ப்போல பிறைபோல, வொளிவது வாயேறி நிற்கும், தன்றான தகடது தான் வெளியிற் காட்டும் தயவான பூரமது பச்சைப்பூரம், பன்றான ராசர்களுக்கு கந்தபூரம் பாரினிலே சித்தர் செய்யும் பூரமாமே. 544

கஸ்தூரிவைப்பு

பூரமாமின்ன மொருவைப்பு கேளு போக்கான ரத்தமென்ற பாளந்தானும், வீரமாம் வேங்கை மரப்பிசினுங் கூட்டி விகற்பமுடன் பழந் தின்னும் வௌவாலெச்சம்,

காசமாங்கலை மானின் ரத்தத்தாட்டி கசகாமல் தாழைமலர் கவசஞ்செய்து, தீரமாஞ் சட்டிக்குள் பொதிந்துமூடி திட்டமுடன் பூமிதனில் புதைத்திடாயே. 545

புதைத்துமே மண்டலஞ் சென்றெடுத்துப்பாரு புகழான கஸ்தூரி யென்ன சொல்வேன், சிதைத்து மேஜலந்தனிலே போட்டுப் பார்த்தால் சிறப்பான ரத்தமதுபோலேயோடும், கதைத்துடனே சன்னிக்கு காலனுகுங் கடிதான வைப்பு மல்லோ சீனவைப்பு, விதைத்துடனேயின்னமொரு மார்க்கஞ் சொல்வோம் விரைவுடனே கேட்பவர்க்குயினஞ் சொல்வேனே. 549

சொல்லுதற்கு நாவுமில்லை யாவுமில்லை துரைகோடி முறைகோடி தொந்தங்கோடி, வெள்ளுதற்கு காண்டாவின் மிருகமப்பா வெழிலான வதிரமது படிதானெட்டு, கொல்லுதற்கு கருங்காலிங்பட்டைத் தாளுங் குணமான காசியென்ற கட்டிதானும், புல்லுதற்கு கிராம்புடனே யேலந்தானும் புகழான கெவுளாவும்சரியாய்க்கூட்டே.

கூட்டவே நாற்சாமமரைத்துமே தான் குணமான சாடியென்ற பாண்டத்துள்ளே, மாட்டவே முதற்றிரமாம் பன்னீர் தானும் மயங்காமல் நிறைவிட்டு தாளிக்கேற்றி, தீட்டவே சீலையது மேலேசெய்து திட்ட முடன் யெரித்திடுவாய் மூன்றுநாளும், நீட்டமுடன் சரக்கெல்லாமொன்றாய்ச் சேர்த்து நேர்ப்பாகவு திரமுடன் கட்டிப்போமே.

போமேதான் பாண்டமது திறந்துபார்க்கப் பொங்கமுடன் சீனமதுவைப்பு மார்க்கம், ஆமேதான் சரக்கினிடவேகமெத்த மப்பனே நாசிதனில் முகரும்போது, வேமேதான் உதிரமது கலக்கங்காணும் விரைவான சூடதுதான் கபாலத்தோடும், போமேதான் கஸ்தூரி யென்ன சொல்வேன் புகல்வரோசித்தர் முனிசொல்லார்தாமே. 549

தாமேதான் போகரிஷி சொன்ன மார்க்கம் தப்பாது வொருக்காலு முறை பொய்யாது, வேமேதான் வேணபகு சித்தர்தாமும் வெகுவெகுவாய்ப்பாடி விட்டார் நூல்கள் தோறும், நாமேதான் காலாங்கி நாதர் பாதம் நற்கமலத்தாள் வணங்கிவடியேன்றானும், போமாதான்பிசகொன்று நேரிடாமல் பூதலத்தில் பிழைக்கவென்று பூட்டினேனே.

கஸ்தூரிவைப்பு

பூட்டினேனின்ன மொருகருமானங்கேள் புகழான யிரத்தமென்ற பாளந்தானும், மூட்டினேன் கார்போகவரிசிதானும் முக்கியமாம் வாலுழுவையரிசிதானும், தாட்டிகமாம் நீலமென்ற கூகைநீறும் தாக்கான பன்னீரால ரைத்து மைந்தா, நீட்டமுடன் பாண்டத் திலிடித்துப் போடு நேர்ப்பாக பூமிதனில் புதைத்திடாயே. 551

புதைத்தவுடன் நீரெல்லாஞ் சுண்டவேதான் பொங்கமுடன் கருநிறமாயிருக்கும்பாரு, சிதைத்துமே நாசிதனில் முகந்திட்டாக் கால்திக் காடுஞ்சுவாசமது திணறிக்காட்டும், பதைத்துமே மேனியது சிலிர்ப்புகாணும் படுஞ்சுறுக்கு கஸ்தூரிபகரப்போமோ, மிதத்துடனே மருந்துகளில் சேர்க்கவேண்டும் மிக்கான போகருடவைப்பு தானே. 552

கஸ்தூரிவைப்பு

வைப்பான மின்னமொரு மார்க்கங்கேளு மகத்தான கமலமுனி சொன்னமாற்கம், வைப்பான காசியென்ற கட்டிதானும் வாகானகருவாயின் பட்டைதானும், வைப்பான விரியுடசார்தான் கூட்டிவளமான ஒட்கத்தினுதிரந் தானும், வைப்பானசரக்குடனே வுதிரவேங்கை வளமுடனேறான் சேர்த்து வரைத்திடாயே. 553

அரைக்கவே பன்னீராலரைக்கவேண்டும் அப்பனே சாடிதனில் பொதியவேண்டும், திரைக்கவே பூமிதனில் புதைக்கவேண்டும் திகழான மண்டலந்தான் சென்றபின்பு, நிறைக்கவே குழிதோண்டியெடுத்துப் பாருயென் மகனே கஸ்தூரி யென்ன சொல்வேன், பரைக்கவே ராசரிடம் சென்றுமேதான் பாங்குடனே வெற்றியது பெறலாம் பாரே. 554

அயவெட்டு

பாரேதான் வயமதுவும் பலம்பத்தாகும் பாங்கான தாளகமும் பலமைந்தாகும், சீரேதான் பெரிகாலன் பாலாலாட்டி சிறப்புடனே வெண்காரம் பொரித்துப்போடு, கூரேதான் வச்சிரமாங் குகையில் வைத்து குமுறவே மேல்மூடிச் சீலைசெய்து, நேரேதான் சரவுலையில்வைத்து வூது நேர்ப்பான களங்கமது சொல்லொண்ணாதே. 555

சொல்லவே சாரமென்ற செயநீர்தன்னால் சுறுக்குடனே தானுருக்கிசாய்ப்பாயானால், கொல்லவேவயமதுவும் சவுடுநீங்கி குணமாகும் களிம்பூறலற்றுப் போகும், வெல்லவே செந்தூரஞ் செய்தாயானால் மிக்கான காயத்குறுதியாகும், புல்லவேதேனதிலேயுண்டு பாரு புகழான தாதுகளும் வலுத்துப்போச்சே. 556

போகர்லிங்கக்கட்டு

போச்சென்று விடுகாதே மைந்தாகேளு பொங்கமுடன் லிங்கமது பலந்தானொன்று, பேச்சொன்றுமில்லாமல் பீங்கானுக்குள் பேரான பாலதனை விட்டுமைந்தா, நீச்சென்ற பாலதனால் சுறுக்குதாக்கு நெடிதனே லிங்கமது சுத்தியாச்சு, மாச்சென்ற பழரசமும் நாழியாகு மகத்தான தேனதுவும் நாழியாமே. 557

நாழியா மேனிச்சாற் நாழியாகும் நலமான கையான் சாற் நாழியாகும் தாழியா மிலைச்சாறு நாழியாகும் தாக்கான வாதளையின் சாறுநாழி கோழியாமிலை மூலிச்சாறு நாழி கொடிதான முசுக்கையுடன் சாறுநாழி வாழியாம் படாமூலிச்சாறு நாழி வளமான கழற்சிக்காய் நாழியாமே. 558

ஆமேதான் பூலாவுஞ் சாறுநாழி அப்பனே வாதண்டைச் சாறுநாழி வேமேதான் கொடிக்கள்ளிச் சாறுநாழி விரைவான தும்பைமலர் சாறுநாழி, காமேதான் வேலியிட சாறுநாழி கருவான விளாவிலையுஞ் சாறுநாழி, போமேதான் பூப்பனையின் சாறுநாழி பொலிவான கஞ்சாவின் சாறுமாமே. 559

நாறான குமரிச்சார் நாழியாகுஞ் சதாவேரி மூலியது சாறுநாழி, வேறான முசுட்டையுட சாறுநாழி மிக்கான கவுதும்பைச் சாறுநாழி, கூறான மத்தங்காய்ச் சாறுநாழி குணமான சிவதைவேர் சாறுநாழி, பாறானதேட்கொடுக்கு சாறுநாழி பாங்கான முறுக்கன் சாற்நாழி கூட்டே. 560

கூட்டவே முடக்கொத்தான் சாறுநாழி குறிப்பான தக்காளிச் சாறுநாழி, மாட்டவே பழுபாகல் சாறுநாழி மதிப்பான குவளைச் சாறு நாழியாகும், நீட்டவே திருகள்ளிச் சாறுநாழி நெடிதான பாலையுடச் சாறுநாழி, மூட்டவே பெருந்தாளிச் சாறுநாழி முனையான பொன்முசுட்டைசாற்தான் சேரே. 561

சேர்க்கவே விதை யெல்லா மொன்றாய்ச் சேர்த்து சிறப்பாக லிங்கத்திற் சுறுக்கு தாக்கு, ஏர்க்கவே லிங்கமது கட்டிப் போகும் எழிலான லிங்கமது வுறுக்கு போலாம், பார்க்கவே வெட்டுருக்கு போலேகாணும் பாங்கான லிங்கமது சொல்லப் போமே, தீர்க்கமுடன் கவசமது சொல்வேன்பாரு தெளிவான சரக்குகளுஞ் சாற்றக் கேளே. 562

கேளே நீ வெடியுப்பு பலமொன்றாகும் கெடிதான விந்துப்பு பல மொன்றாகும், சூளே தான்பூநீறு பலமொன்றாகும் சுடரான துருசதுவும் பலமொன்றாகும், வீளே தான் படிகாரம் பலமொன்றாகும் மிக்கான காரமது பலமொன்றாகும், பாளே தான் கெந்தியது பலமொன்றாகும் பருவமாம் வளையலுப்பு பலமொன்றாமே. 563

ஒன்றான வுப்புடனே சாரமொன்றாம் ஒளிவான தாளகமும் பலமொன்றாகும், குன்றான வீரமது பலமொன்றாகும் குறிப்பான பூரமது பலமொன்றாகும். அன்றான வாறுவகை செயநீர் தன்னால் அப்பனே நாற் சாமமரைத்திடாயே. 564

அரைக்க வேகைபோலே லெண்ணையாகும் அப்பனே மெழுகதனை யெடுத்துக் கொண்டு, திரைக்க வேதசபங் காய் செய்துகொண்டு தெளிவான லிங்கத்திற் கங்கி பூட்டி, மரைக்கவே சுண்ணும்பு சீலைசுற்றி மார்க்கமுடன் ரவிதனிலே காயவைத்து, விரைக்கவே மணல் மறைவில் புடத்தைப்போடு வீரமுடன் லிங்கமது கட்டிப்போமே.

போமே தானிப்படியே புடமே பத்துப் பொங்க முடன் மாருமல் புடத்தைப்போடு, வேமேதான் லிங்கமது கவசம் நீக்கி மேன்மையுடன்ருன் பார்க்கவுருக்குமாகும், சாமேதான் லிங்கமது யெடுத்து மைந்தா சாங்கமுடன் தங்கமது பத்துக்கொன்று, நாமேதான் சொன்னபடி தங்கரேக்கை நயமாக லிங்கத்திற் கங்கிசுத்தே. 566

சுத்தியே குன்றிமனி பசையினுலே சூட்சமுடன் விராலியிட தயிலங்கேளு, பத்தியுடன் பீங்கானுக்குள்ளே வைத்து பாலகனே யெருக்கன் பால்சுருக்கு தாக்கு, துத்தியுடன் தீநெருப்பை மூட்டிக்கொண்டு சுடரொளி யின்மேல் வைத்து வாட்டு மார்க்கம், புத்தியுடன் விராலி யிட தயிலத்தாலே பொங்கமுடன் சுறுக்கிடவே மெழுகு மாமே. 568

மெழுகான பதம் பார்த்து மைந்தாகேளு மேன்மை யுடன் யெருக்கன் பால் சுறுக்குதாக்கு, நழுகான வராகத் தின் நெய்யால் மைந்தா நலமுடனே நாற்சாமஞ் சுருக்கு தாக்கு, வழுகாது மெழுகாகும் சிதத்துக் கொப் பாம் வாகான மெழுகெடுத்துப் பதனம் பண்ணு, தொழு காத வயிரவரைப் பூசித்தேதான் தோற்றமுடன் கொடுக் கும்விதி சொல்லுவேனே. 568

சொல்லவே வெள்ளிதனில் நூற்றுக்கொன்று சூட்ச முடன்ருனுருக்கி மாற்றைப்பாரு, வெல்லவே மாற்றதுவு மெட்டதாகும் மேன்மை பெற செம்பிலே கொடுத்துப்பாரு கொல்லவே வசம்பினிட ஆறல்நீங்கி குருமருந்தால் செம்பி னிலே நூத்துக்கொன்டு, புல்லவே கொடுத்திட மாற்ரே பத்து குறையாது வித்தையது வதீதந்தானே. 569

தாஞன சித்தர்முனி ரிஷிகள் தாமும் தயவுடனே செய்யுமிந்த வேதையாகும், கோஞன குருவருளைப் பெறவே வேண்டும் பெருவிட்டால் வாதமதுவாய்க்குமோ சொல், தேஞன மஞேன்மணியை பணிய வேண்டும் பணி யாட்டால் வாத சித்தி கிடைக்குமோ சொல், பாஞனபரா பரியைத் துதிக்க வேண்டும் துதியாட்டால் விட்டகுறை லபியாதாமே. 570

ஆமேதான் சித்தர் முனிரிஷிகள் சாபம் அப்பனே முன்னின்று வகற்ற வேண்டும், போமேதான் குரு பதத்தை வணங்க வேண்டும் வணங் காட்டால் காயு

மில்லை பூவுமில்லை, வேமேதான் சித்தருடன் வாதுபேசி வேதாந்தத்தாயினது வருளினுலே, நாமேதான் காலாங்கி வரமும்பெற்று நாட்டினிலே மாஞக்கள் பிழைக்கத் தானே. 571

பிழைக்கவென்று சீனபதி சென்றுமேதான் பிழை மோசம் நேராமல் கருவாய்க்கண்டு, தழைக்கவே தாரணி யில் பிழைக்கவென்று தடுமாற்றம் வாராமல் மைந்தாயா னும், பழக்கமுடன் கிட்டிருந்து தொண்டு செய்து பல காலுங்கை மறப்பைபழுதாராய்ந்து, வழக்கமுடன் விடை பெற்று சீனம்விட்டு வந்தேனே வந்தேனே தெட்சணத் தில் பாதைதாமே. 572

பாதையால் வந்துனக்குப் பாகஞ்சொன்னேன் படுங் காளி முழுமக்களான பேரை, வாதையுடன் ருனகற்றி தூரத்தள்ளிவளர்ப்ப முடன் கைமசக்குயாருங் காஞர், வேழைமுகமுன்னிருந்து சித்தன்போல மேதினியில் துஷ் டர்களை யகலத்தள்ளி, கோதையென்னுஞ் சமுசரா மாய் கைநீக்கி குணமுடனே யிவ்வேதை செய்வாய்தானே.

செய்குவாய் பிராணுயந்தன்னில் நின்று சிறப்புடனே சிதானந்தம் பாசம்நீக்கி, உய்குவாய் சடாட்சரத்தையுச் சரித்து வுத்தமனே சுடரொளியைக் கண்டு போற்று, வைகுவார் தன்னை மனமெதிர் நோகாமல் வாசவனே முன் னிருந்து வம்பாள்பாதம், மைகுடனே வம்பரத்தை மேலே கும்பிவரமுடனே வாழ்கவென்று வசனித்தேனே. 574

பாஷாணமெழுகு

வசனித்தேனின்ன மொருகருமானங்கேள் வாகுடனே மாஞக்கள் பிழைக்கவென்று, தூசனித்த பாஷாணம் பல மொன்ருகும் துடியாசிப்பி யென்ற சுன்னநங் தானும், பச னித்தசுக்கான்றன் சுண்ணந்தன்னை பாகுடனே பாஷா ணத்தங்கிபூட்டி, நிசனித்து சட்டியிலே மணல்தான் கொட்டி நிறையவே மணலாலே மூடிப் போடே. 575

போடவே நாற்சாம மெரித்த போது பொங்கமுடன் தீயாறி யெடுத்துப்பாரு, நாடவே பாஷாணஞ் சுத்தி யாச்சு நலமாக கட்டிதனை யெடுத்துக் கொண்டு, மூடவே வெள்ளியென்ற ரேக்கு தன்ஞல் முறைப்படியெ பாஷா ணத் தங்கிபூட்டி, மாடவேசாறையென்ற சர்ப்பங் தன் ஞல் மார்க்கமுடன்ருனெடுத்து கொழுப்பை வாங்கே.

வாங்கியே கொழுப்பு நிகர்வீரஞ்சேர்த்து வாகுடனே பாஷாணஞ்சுறுக்கு தாக்கு, தேங்கியே போகாமல் மெழுகு பண்ணு தெளிவான செம்பதனை வெள்ளி பண்ணு, ஓங் கியேயச்செம்பு நாலுக்கொன்று வுத்தமனே மெழுகெ டுத்து குருவொன்றீய, ஏங்கியே திரியாதே மைந்தா கேளு யெழிலான வித்தையது வதீதங்கானே. 577

காணவே வெள்ளியென்ற செம்புதன்னில் கருவான வெள்ளியது நாலுக்கொன்று. பூணவேதான் சேர்த்து வுருகிப்பாரு புண்ணியனே துய்யனுக்கிணை வேறுண் டோ, தோணவே பாஷாண மிகவேதிக்கும் துறைகோடி முறைகோடி தொந்தங்கோடி, நாணவே சித்தர்கள்தான் செய்யுமாற்கம் நலமுடனே மானிலத்தில் செய்யலாச்சே.

தாளகயீயம் செந்தூரம்

செய்யவே யின்னமொரு மாற்கங்கேளு தெளிவான தாளகமும் பலமொன்றாகும், நையவேதுருசுடனே சார நீரால் நவிலவே தானரைத்து மெழுகுபண்ணு, துய்யவே தாளகத்துக்கங்கி பூட்டித் துடியுடனே சுண்ணாம்புச் சீலைசெய்து, பையவே கோழியென்ற புடத்தைப்போடு பாங்கான தாளகமும்கட்டிப்போமே. 579

போமென்று விடுகாதே பூபாகேளு புகலுவேனின்ன மொருமாற்கம்பாராய், காமென்ற கடுங்காரச்சீனமொன்று களறவிட்டுச் செயநீராலரைத்துமேதான், வேமென்ற தாளகத்துக்கங்கி பூட்டி விரைவுடனே சுண்ணாம்புசீலை செய்து, பாமென்ற வெயில்தனிலே காயவைத்துப் பால கனே கோழியென்ற புடத்தைப்போடே. 580

போடவே தாளகமுஞ் சிவந்து மின்னும் போக்கான சரக்கதுவுங் கட்டிப்போகும், நீடவே வங்கமது போலே காணும் நீணிலத்தில் வாதி மெய்ச்சும் வங்கமாச்சு, கூடவே வங்கமதை தானெடுதது குறிப்புடனே காரமது காலாய் சேர்த்து, போடவே மூசைதனிலுருகித் தீரு பொங்கமுடன் தாரத்தின் வங்கமாமே. 581

வங்கமென்றால் வங்கமது சொல்லப்போமோ வள வான தாரத்தின் வங்கமாகும், பங்கமொன்றுஞ் சொல் லாதவங்கமாகும் படுமுன்னேசூதத்தைக் கட்டிக்கொள் ளும், தங்கமென்ற லோகமதை சரியாய்க் கூட்டி தாக் கிடவே தங்கமது வங்கமாகும், அங்கமுடன் தங்கமது வங்கமானால வனியிலே வாதவித்தைப் பார்க்கப்போமோ.

போமென்று விடுகாதே மைந்தாகேளு பொங்கமுடன் கெந்தியது நாலுக்கொன்று, வேமென்ற சிலையதுவு மொன்றே யாகுமிக்கான காரமதுவொன்றே யாகும், பாமென்ற வீரமது வொன்றேயாகும் சடுக்கானவளை யலுப்பு வொன்றேயாகும், யாமென்றபடிகார மொன்றே யாகும் பாகுடனே விவையெல்லாமொன்றாய்க் கூட்டே.

கூட்டியே தானரைப்பாய் செயநீர்கேளு குறையாத சாரமென்ற செயநீர்தன்னால், தாட்டிகமாய் தானரைப் பாய் சாலுசாமம் சட்டமுடன் ரவிதனிலே காயப்போடு, நீட்டமுடன் சரக்கதனை பொடி தாக்கினிலே வரமாய் குழிக்

ல்லில் பொடித்துக் கொண்டு, வாட்டமுடன் காசி யென்ற குப்பி கொண்டு வளமாக சீலையது வேழு செய்யே. 584

செய்யவே காசியென்ற மேருதன்னில் சிறப்புடனே ருந்தெல்லாங் குகையிலிட்டு, பையவே மரக்காலால் காண்டு மூடி பாங்குடனே சீலையது வலுவாய்ச் செய்து, மையவே சட்டிதனில் மணல்தான் கொட்டி மாற்கமுடன் மேல்சட்டி கொண்டு மூடு, துய்யவே சீலையது வலுவாய்ச் செய்து தோராமவாலு கையிலேற்றிடாயே. 585

ஏற்றவே சாமமது யிருபதாகும் யெழிலான தீமூட்டி யெரித்தாயானால், மாற்றமுடன் செந்தூரமென்ன சொல் வேன் மயங்கா தேவருண் மைந்தா புகலக்கேளு, சீற்ற மென்ற செம்புதனில் பத்துக்கொன்று திறமுடனே தானு நக்கிக் கொடுத்துப்பாரு, கூற்றமென்ற வூரலதுமெங்கே போச்சு குணமான செம்பதுவு மாற்றுமாச்சே. 586

மாத்தான பொன்னதுவும் பசுமை மெத்த மண்டலத் திலார் செய்யப் போராரப்பா, நீத்தான சித்தர் முனி செய் வாரப்பா நேர்மையுடன் கருவாளி செய்வான்பாரு, கூத் தான கூத்துவிதி சித்தர் கூத்து குவலயத்தில் முழு மக்கள் செய்ய மாட்டார் நாத்தான நாதாக்கள் செய்யு மாற்கம் நலமுடனே யுங்களுக்கா யுரைத்திட்டேனே. 587

உரைத்திட்டேன் காலாங்கிதனை நினைந்து வுத்த மனே ஒரு கோடி நூலைப் பார்த்து, நிரைத்திட்டேன் சாத்திரத்தி னுளவையெல்லாம் நேர்மையுடன் பிழைக்க வென்று யானுஞ் சொன்னேன், குரித்திட்டேன் சித்தர் சொன்ன நூலையானுங் குவலயத்தில் பிழைப்பதற்கு காண்டஞ் சொன்னேன், உரைத்திட்டே னேழு லட்சங் கிரந்தந் தன்னை யேழைகட்கா யிரக்கம் வைத்துப் பாடினேனே. 588

பாடினேன் யேழாயிர சத்தகாண்டம் பாங்குபெற தமிழ் போல பாடி வைத்தேன், தேடியே பார்த்தாலுங் கிடைக்குமோ சொல் தேசத்தில் கிட்டாது சிவயோகிக்கு, நாடியே நூல் தானும் கிட்டும் பாரு நரகில் விழும்பாவி யற்கு கிட்டுமோசொல், கூடியே சீனபதி சென்று யானும் குறிப்புடனே பாடி விட்டேன் மர்மந்தானே. 589

குடவன்செம்பு

தானான வின்னமொரு போக்கு கேளு தாக்கான பித்தளை தான் சேர்தானென்று, கோனான வச்சமென்ற தகடதாக்கி கோர்வையுடன் கடை சரக்கு சொல்லக் கேளும், பானான பாஷாணம் பலங்காலாகும் பதிவான தாளகமும் பலங் காலாகும், வேனான லிங்கமது பலங் காலாகு மிக்கான வீரமது பலங்காலாமே. 590